உ

கடவுள்துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவ ரருளிச்செய்த

பொன்னுருவிமசக்கை.

இஃது

சென்னை

சிந்தாதிரிப்பேட்டை

வீராசாமிநாயுடு அவர்களால்

பார்வையிடப்பட்டு

திரிசிரபுரம்

புஸ்தகஷாப்பு

தி. சபாபதிபிள்ளை

அவர்களாற்றமது

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1891

பல்கலைக் கழக நூலக
JAN 1987

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

பொன்னுருவிமசக்கை.

விநாயகர்தோத்திரம்.

காப்பு.

சீதக்கமலமுள்ள செந்தாமரைமுகவா
பாதச்சிலம்பொலிக்க பலமணிகள்தான்கலிக்க
பொன்னுருவிமாலையனே புகல்கல்விசாலையனே
வன்னமருங்கோனே வளர்கொம்பெருங்கோனே
காரானைமாமுகனே கண்ணனமருமகனே
சீரானகல்வியனே செயபும்போர்மெல்லியனே
நனிவாழைத்தீங்கனியே நவில்பலாமாங்கனியே
தனிமாலைபூண்மணியே தளசேகரக்கோரணியே
தேவருக்குந்தேனே தேசத்தோர்சீவனே
யாவருக்கும்பெரியவனே யமரர்க்குரியவனே
அத்திமுகனோ அரனார்மகனோ
சத்திமகிழ்புதல்வா சாற்றுமவனோமுதல்வா
பொன்னுருவி நன்கதையைப்போற்றிமிகப்படிக்க
விக்கினங்களவாராமல் விநாயகரேமுன்னின்று
மைந்தனாிக்கதையை மகிழ்ச்சிபாயானபாட
எந்தனிடவினைகள் எல்லாம்பறந்தோட
புவிதனிலிக்கதைகள பூர்த்தியாய்த்தானபரவக்
கவிமுன்னேவந்துதவும கற்பகப்பிள்ளையாரே
பாட்டினிசைதெரியேன பாவினங்களசொல்லறியேன்
ஏட்டிலெழுதறியேன் எழுத்தாணிகூரறியேன்
உனக்கு அடிமையானேன உமபாபிரானேரோ
எனக்குமொருமுகமாய இலங்கும்பெரியோனேர்
சொர்க்கம்போவாகருக் துணையாயுதவிசெய்வீ
வர்க்கம்பலகாரம் வாங்கும்பெரியோனே
அப்பமெழுநூறும அதிரசங்களதொண்ணூறும்
செப்பரியவெள்ளருண்டை சேரநூறாயிரமாம்
உடைக்கக்கல்லதேங்காயகளொன்பதுநூறாயிரமாம்
படைக்கக்கல்லபச்சரிசிபதினாயிரக்கலமாம
கூனோடேபுரார்க்கும் குடத்தோடேசர்க்கரையும்
தேனோடேசெந்தினைமா தேவாமிர்தமுடன்

செக்கரும்புரஸ்தாளி சீனிப்பலாப்பழமும்
கதம்வாழைக்கனியும் தளாவில்லாமாங்கனியும்
தேங்காய்கொழுக்கட்டை திரளானபாணக்கமும்
மாங்காய்விளாங்கனியும் மாதுளைநற்கனியும்
ஒக்கவோராமாகவே ஒளிவானஐங்கரர்க்கு
நீங்கில்லாச்சாம்பிராணி தீபதூபமுந்தேன்
வைத்துநான்வேண்டினேனையா மாயனார்மருமகனே
சிந்தைதனிலிருந்து சிறுபேன்புனைனில்லுமையா

சுப்பிரமணியர்தோத்திரம்.

கந்தாகடம்பா கதிர்வேலாகார்த்திகையின்
மைந்தாவென்றுன்னின்று வாழ்த்துகாருமையா
வள்ளிதனைவாகார வந்தெனக்குமுன்னடைவாய்
காமனைத்துறாமல் கடையேன்முன்னில்லுமையா
போருநாசீலா புனிதவடிவேலா
ஆறுபடர்ந்தவனே அடியேனைக்காருமையா
பக்திபுன்னெறிமிகன் பரிந்தெனக்குமுன்னடைவாய்
புத்திதன்னைநீகொடுத்தால் புகழ்ச்சியுடனான்படிப்பேன்
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிரானுமாசிவசண்முகனேமுன்னடைவாய்

சரஸ்வதிதோத்திரம்.

நாவிற்சரஸ்வதியே நாவிற்புகுந்தேவியரே
பூவிலமர்ந்தவளே புல்லரிக்கமுன்ன வாய்
கலைமகளேபொன்னுருவி மசக்கைதன்னைப்பாடிப்படிக்க
நிலையுடனேநானுந்நினைவிறவேயருந்தம்மாள்
தாமரையில்வாழ்பவளே தாயேமுன்னில்லுமம்மாள்
நாமகளேபூமகளே நாயேன்முன்னில்லுமம்மா
சரணமென்றடிபணிந்தேன் தருவாக்குவேணுமம்மாள்
தருணமிதுசமயம் தயைபுரியவேணுமம்மாள்
கறமை கம்பாடுகிறேன் காரிழையாள்தனசையை
குற்றமிருந்தாலுங் கூட்டியிசைக்கவேணுமம்மாள்

கதையின்வரலாறு.

பேடையில்கண்ணுள் பொருந்திருவாளநாயகமே
வழுப்பமிலேயும் எழுநிலைமின்மேலேறி
மேலாகத்தலைவாயிந்தலைத்தாள்திறந்து
அரண்மனைசாலகத்தை ஆகக்கவேதான்திறந்து
பலகேணிவாசல் திறந்ததைப்பங்கிளியும்
நூலாலகந்திரளாக நூறபெருநவர்தான்பிறந்தார்
அவர்-அம்பலக்கோரும் அடங்கலும்படலோர்
ஆண்மலடுபெண்மலடு அருகிருந்தார்தான்மலடு
ஆனைமலடு அருஞ்சிக்கந்தான்மலடு
ஒட்டைமலடு ஊங்கிருந்தார்தான்மலடு
குதிரைமலடு குடியிருந்தார்தான்மலடு

பொன்னுருவிமசக்கை.

பகவுமலடுவாசல் பணிசெய்வார்தான்மலடு
ஆடுமலடு அடங்கலும்தான்மலடு
தெருவிலிருக்கிற தென்னமரந்தான்மலடு
வாசலிலிருக்கிற வாழைமரந்தான்மலடு
புறக்கடையிலிருக்கிறபுன்னைமரந்தான்மலடு
பிச்சைக்குவருகிற பிராமணருந்தான்மலடு
ஆற்றில்கரைத்தபுளி யாகினேன்பாவிநான்
அங்காடிக்கிட்ட பதரானேன்பாவிநான்
குன்றின்மேல்பெய்த மழையானேன்பாவிநான்
குடத்திலேவைத்தவிளக்கானேன்பாவியென்று
வையநகராளும் மகாராசன்தேவியரும்
மாநகரமாளும்மகாராசன்தேவியரும்
தேசத்தையாளுந் திரியோகிரன்தேவியரும்
அவளுக்கு-மைந்தருயில்லையென்று மாதுமனஞ்சலித்து
மாதுமனஞ்சலித்து மண்டபத்தில்பள்ளிகொண்டாள்
வேஷ்டி விரித்துவெருந்திலத்தில்பள்ளிகொண்டாள்
ஆடைவிரித்து அழுதுமேபள்ளிகொண்டாள்
முந்தாணிதான்விரித்து முருகுழலாள்பள்ளிகொண்டாள்
மகாமுனியாழ்வாரும் வண்ணகுழைபிள்ளையாரை
பிராமணராய்வந்து பெருந்திருவாள்கைகொடுத்தார்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்வாங்கி
மாதுமனமகிழ்ந்து மண்டபத்திற்கண்விழித்து
பொழுதுவிடியட்டும் பொன்னுருவிக்கேகொடுப்போம்
நாலுநகளவுகண்டேன் நற்கன்னிக்கேகொடுப்போம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
கங்குல்விடிந்தது கதிரோனுமுதித்தான்
செங்கண்மால்கோவிலுக்குத் திருக்காப்புச்சென்றது

தாதிகள் சமையல்செய்தது.

அங்கொருதாதி அறிவுடையாள்தானெழுந்து
காஞ்சிநாடாளும் கருணர்வருவாரென்று
ஆக்குமடப்பளியை அலகிட்டுத்தான்திறந்து
கோலமடப்பளியைக் குச்சிட்டுதான்திறந்து
அடுப்புமெழுகியே அட்சதைக்காப்புமிட்டு
பானைகழுவி பனிநீருலைசாய்த்து
வடகடலில்செம்பொன்னை வாரியனல்மூட்டி
தென்கடலில்முத்தென்னத் திரட்டிஉமியினைத்து
ஆச்சாவுந்தேக்கும் அகிலும்பிளந்தடுக்கி
மாணிக்கக்கட்டி நெரிந்துநெருப்பாக்கி
குழலெடுத்துஊதினர் கொம்பனைமார்தாதியரும்
பூமியிலுள்ள புதுக்கறிகளத்தனையும்
காவடியில்கொண்டுவந்து போட்டார்கள்மன்னவர்கள்

அம்மிபதித்தார் அரிவாள்மனைபடுத்தார்
காய்த்தபூளைகாய் கறிமுளைகாய்சீரகமாம
அரைத்துவழித்தெடுத்தார் அன்பானதளிகைக்கு
சேர்த்துவழித்தெடுத்தார் செம்பொன்தளிகைக்கு
வாழைக்காய்கொய்யவார வழுதலங்காய்காம்பரிவார
சமைப்பலாக்காயை இலமுள்ளுபோக்கிடுவார்
சோதிபிறகக சிறப்பாகசெய்திடுவார்
அன்பான அவரைக்காய் ஆய்வார்கள்கொம்பனைமார்
பாதுளங்காய்பூசினிக்காய் வண்மையாய்வகுத்திடுவார்
கற்பூரம்போலவே கருணைசிறுகிழங்கு
அற்புதம்போலே புளியிட்டுத்தான்சமைத்து
பொற்பதமதாகப் போதச்சமைத்துவைத்தார்
ஆயிரத்தெட்டு அருமகறியும்போசனமும்
அன்னூறதியெட்டு பொரிக்கறியும்போசனமும்
தாளிதமுமபச்சடியும் தன்னில்வகைக்கறியும்
அடிசில்சமைத்து அரைநாழிக்குள்ளாக
வெள்ளிகிடாரத்தில் வெந்நீருபசரித்தார்
பொன்னுங்கிடாரத்தில் போகநீர்பாரித்தார
தங்கக்கிடாரத்தில் தாகநீர்பாரித்தார்
சாலோடேபாரித்து வைத்தார்தடங்கண்ணார்
கனகமணிகட்டில்விட்டு கருணையெழுந்திருந்து
ஆடைகளைந்து ஆபரணந்தான்கழற்றி
ஆடையுங்கச்சும் அவிழ்த்ததந்த ஆணழகன்
ஆபரணப்பெட்டி அப்போதுதான்திறந்து
ஆபரணமெல்லாம் அடங்கலுமகழற்றிவைத்து
தங்கபிதியடிமேல் ஏறித்தணூசியாரும்
முத்துபிதியடியைத தொட்டுநடந்தார்
முத்தால்கடக்கை முன்னேகிதாண்டந்தார்
மஞ்சனீர்சாலையிலே மன்னரும்போயபுகுந்தார்
அங்கேயொருதாதி அரிவையாளோடிவந்து
கெண்டியில்தீர்த்தமது கொடுத்தாள்கிளிமொழியாள்
மாலைமுடியானும் மஞ்சள்நீராடினார்
சரத்துயில்களைந்து இழைசேர்நதபட்டுடுத்தி
நனைந்ததுயில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
சிவசிவாவென்று திருநீற்றுககாப்பணிந்து
அரகராவென்று அணிந்தாரேவெண்ணீறு
பத்திரஞ்சாத்தி பகவானைபூசைசெய்து
தர்ப்பைமலரெடுத்து சூரியனைபூசைசெய்து
இந்திரனைநோக்கி இருகையால்தான்தொழுது
ஐயனைமெய்யனை ஆயிரங்கண்ணிந்திரனை
பொய்சொல்வார்க்கெல்லாம் பொருந்தவேதானமில்லை
மெய்சொல்வார்க்கெல்லாம் வேணபணிதானளித்து

பொன்னுருவிமசக்கை.

முப்பத்துமுக்கோடி முனிவரையும்பூசைசெய்து
நாற்பத்தெண்ணாயிரம ரிஷிகளையுங்கைதொழுது
ஆடையுங்கச்சும் அணிந்தந்தஆணழகன்
சீருவ்வுங்கச்சும் எடுத்தந்ததோவீரன்
முத்துமிதியடியைத் தொட்டுமிகடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
அமுதுண்ணும்மண்டபத்தே ஆணழகன்வந்திருந்தான்

கருணர் போசனமுண்ணது.

அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
வட்டமணைபோட்டு வாழைகுருத்துமிட்டாள
இட்டமணைமேலே எழில்விசயாவீற்றிருந்தா
புலிமுகக்கால்நிறுத்தி பொன்னுந்தளிகையிட்டார்
சிங்கமுகக்கால்நிறுத்தி செம்பொன்னுந்தளிகையிட்டார்
மற்றுமொருதாதி மாதரவளோடிவந்து
தாளிதமும்பச்சடியும் தண்ணில்வகைக்கறியும்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
கூட்டுக்கறியும குழம்பில்வகைக்கறியும்
ஆயிரத்தெட்டு அருக்கறியுமபோசனமும்
சுற்றிலும் கறியைவைத்து புத்துருக்குநெய்வார்த்தாள்
காராவிநெய்யதனைக் கைநிரம்பதான்சொரிந்தாள்
அந்தஅடிசில் அமுதுண்ணப்பிற்பாடு
அத்தளிகைமாற்றியே பொற்றளிகைமுன்னேவைத்தாள்
காச்சியபாலும் கற்கண்டுமுப்பழமும
வாழைப்பழமும் மதுரையின்மாம்பழமும்
வேரின்புறத்தில் வெடித்தபிலாப்பழமும்
கொம்புசிறுதேனுங் கோதுபடாசர்க்கரையும்
மலையில்சிறுதேனும் மலையாளசர்க்கரையும்
இஞ்சியெலுமிச்சை இயலானநார்த்தங்காய்
கொஞ்சிகளாக்காய் கொடிதானதமர்த்தங்காய்
பச்சைமுளகாய் பசுந்தான இஞ்சியும்
வடுந்தயிருமாய் எடுத்துவிட்டாளேந்திழையும்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு

கருணர்பொன்னுருவியைச்சேர்ந்தது

மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
ஏழுநாழி அசரடிக்கவேணுமென்றார்
கருணர்படுந்துயரம் கடல்வண்ணர்தானறிந்து
அவர்சொல்லைக்கேட்டு அசரடித்தார்மாயவரும்
காசிவளநாடாளும் கருணர்பெருமாளும்
கருஞ்சகருங்குழலை கையாலெடுத்தணைந்து
மதிமுகச்சுந்தரத்தை மன்னனெடுத்தணைந்து
தோள்நிறையச்சந்தனத்தை தேவியார்க்குமேனியெல்லாம்

மார்பிறையச்சந்தனத்தை மங்கையர்க்கு மேனியெல்லாம்
போதவே தான் பூசி பொங்கியே மனங்குளிர்ந்து
மகிமைநல்லாள் பூமுடியில் மல்லிகைப்பூமாலைசூடி
காமத்திருமுகத்தில் கஸ்தூரி பொட்டிட்டு
கமலத்திருமுகத்தில் கண்ணுக்கு மையமர்த்தி
மடித்துச்சுருள் கொடுக்க இல்லையே மங்கையரே
மரத்தோடே சேர்ந்ததொரு மங்கையுருவானதேய
கலரமடைந்த அன்னம்போல் வாய்த்தாயே சித்திரமே
வண்டுமுகந்தாப்போல் வள்ளலே நான் முகந்தேன்
புட்பமுகந்தாப்போல் பொற்கொடியே நான் முகந்தேன்
என்று சொல்லிக்காளையவர் ஏங்கிமனந்தளர்ந்து
ஆசைவெறுத்திடலாம் ஐயனைநோக்கிடலாம்
எல்லாரைவெறுத்திடலாம் இனியாரைநோக்கிடலாம்
தன்கிளிகளைத்தான் வெறுத்துத்தம் முந்தாரைப்போது
கட்டில்விட்டிறங்கி மங்கை காவலனும்போய்நடந்தான்
மஞ்சள்நீராசாலையிலே வந்தாரே மன்னவரும்
காலாடுகையும் கனிவாயுஞ்சுத்திசெய்து
மார்பகையாமகிழ்முகமுஞ்சுத்திசெய்து
பாளைக்கவிழ்த்துடுத்திப்பட்டாடைமேலணிந்து
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்று அணிந்தாரே வெண்ணீறு
இந்திரனோக்கி எழில்வீரன் தெண்டனிட்டார்
ஆனையுகைச்சும் அணிந்தகத்த ஆனைமுகன்
சிருலவுங்கச்சும் எடுத்தணிந்தான் சேர்வீரன்
இப்படியாக இவரிருக்கும் வேளையிலே
பெருந்திருவானதொரு குமாரனுடைய
கருணனா ஆசிர்வதித்தது
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளோடி வந்து
காஞ்சிநாடாளும் கருணைபெருமயல்தாள்
காஞ்சிநாடாளுங் கருணையவாய்பார்த்து
பூவுயபுதுமலரும் பொன்னுருவி அட்சதையும்
தாயார்தன்பாதத்தில் தாவேகன் பூசொரிந்தான்
மாதாவின்பாதத்தில் மலர்தூவி தெண்டனிட்டான்
ஆச்சியின்பாதம அடிவணங்கி தெண்டனிட்டான்
தெண்டனிட்ட மன்னவனை சீர்பெறவே தானெடுத்து
வாழ்வீர்வளந்திருப்பீர் வையகத்திலுயர்ந்திருப்பீர்
சிறப்பீர்நிலைத்திருப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
போருக்குப்போயி பொழுதுடனே வென்றிடுவீர்
வெண்டுகளரியிலே வீரப்பட்டம்பெற்றிடுவீர்
மாதாமனமகிழ மைந்தர்களைப்பெற்றிடுவீர்
பெற்றார்மனமகிழப்பிள்ளைகளையீன்றிடுவீர்
வாழ்வீர்களென்று மனங்குளிரவாழ்த்தினாள்

இருமிருமென்றுசொல்லி இருந்தாரிருவருமாய்
காஞ்சிநாடாளும் கருணர்பெருமாளே
பொன்னுருவிமாளிகைக்குப் போனீரோபுண்ணியரே
காயோபழமோதான் காஞ்சிநாடாண்டவரே
போனதொருகாரியத்தை புண்ணியரேசொல்லுமென்றாள்
காஞ்சிநாடாளுமா கருணாரவர்கேட்டு
ஆச்சி-அளிந்தபழமொழும் அதோவாராள்பாருமென்றார்
சித்திரத்தூணருகே செல்வன்மறைந்திருந்தான்
மாணிக்கத்தூணருகே மன்னன்மறைந்திருந்தான்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவிதன்னை ஓவமானம்
படுத்தினவராரென்றுதாதிகளை
வினவினது.

ஏழுநாழிகையும் சென்றுதிளங்கொடிக்கு
கட்டிசுருட்டியவள் கட்டில்விட்டுகீழ்த்திக்கு
வாரிசுருட்டியந்த மாதரவள்தானெழுந்து
தாயக்கருங்குழலாள் தாதியெதிரில்வந்து
தாதி-உடைதாரந்தான்குலைந்து ஒட்டியாணம்பூட்டிவிட்டு
என்-கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
மங்கையுமப்பூமுடியில் மல்லிகைப்பூமாலைசூட்டி
என்-வாய்திறந்துதாயபூலம் வைத்தவளைச்சொல்லுமென்றாள்

தாதிகள்பொன்னுருவிக்குமனந்
தேறுதல் சொன்னது.

தாய்போல்வளர்த்தெடுத்த தாதியருந்தான்கேட்டு
கண்டும்பொறுக்காத கணவன்அணைந்தாரோ
பார்த்தும்பொறுக்காத பத்தாவணைந்தாரோ
வெளியிலுஞ்சொல்லலாமோ வேல்பொருந்துங்கண்ணே நீ
மனதிலிராதகோதான் மங்கையிளங்கொடியே
போதவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
கோபித்துக்கண்சிவந்தாள் கொல்லும்புலியதுபோல்
பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து
அவள்-ஆடையவள்கைபிடித்துக் கூந்தலொருகைபிடித்து

பொன்னுருவிமாமியாரிடத்தில்
வந்துவினவினது.

மாமியார்மாளிகைக்கு வாராள்மயில்போல
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
மாமியுங்கண்டுமங்கே வாவென்றுதானழைத்தாள்
இங்கேயிருமென்று இளந்தட்டுதட்டலுற்றாள்
தட்டுங்குழலிட்டத்தே கார்குழலாள்வீற்றிருந்தாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து

வந்தபொருகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்றாள்
மாமி-உடைதாரந்தான்குலைந்து ஒட்டியாணம்பூட்டிவிட்டு
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
என்-மங்கைநல்லாள்பூமுடிக்கு மாணிக்கப்பொட்டுமிட்டு
வாய்திறந்துதாம்பூலம் வைத்தவரைசொல்லுமென்றாள்

பெருந்திருவாள் மருமகளாகிய பொ
ன்னுருவிக்குமணந் தேறுதல்
சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
கண்டும்பொருக்காத கணவனணைந்தாரோ
பார்த்தும்பொறுக்காத பதகாவணைந்தாரோ
காஞ்சிநாடாளும் கருணாகரவாவருவார்
கல்விபெரிய கருணாகரவர்வருவார்
பின்னொருவர்வருவாரோ பொற்கொடியேயுன்னண்டை
மற்றொருவர்வருவாரோ மயிலனையேயுன்னண்டை
வெளியிலுஞ்சொல்வாரோ வேல்பொருதுங்கண்ணாளே
மனதிலிராதே மங்கையிளங்கொடியே
பொன்னுருவிநாயகியும் பொற்கொடியுந்தான்கேட்டு
கோபம்பெரிதாகிக கொம்பனையுந்தான்சீறி
அவன்-இழிகுலத்தானென்றுசொல்லி இனிதீண்டவொண்ணாதென்று
தேர்ப்பாகனென்றுசொல்லித் தீண்டாமல்தானிருந்தேன்
திருமதுரைக்குள்ளே திருவாவும்வாயிலுள்ளே
கட்டிவரும்பாற்குடங்கள் காவலனார்வாசலிலே
விடுவேனோநானவனை வேல்பொருதுங்கண்ணாளே
ஆடைபொருகைபிடித்துக கூடவொருகைபிடித்து
மாமனுக்குஞ்சொல்வேனென்றாள் மாலைக்கருங்குழலும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
அத்திபுரத்திற்கு அதகனைப்பெண்டுகளும்
மாமனுக்குஞ்சொல்வாளோ மாலைக்கருங்குழலே
ஆணைப்பிறந்தவர்கள் அறிந்தாரோயாமாமில்
வெட்கமுமில்லையோ வேல்பொருதுங்கண்ணாளே
போதேவருடந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
மாதுநல்லாள்பொன்னுருவி மண்டபஞ்சென்றேறினாள்

பொன்னுருவிகெர்ப்பந்தரித்து
மசக்கையானது.

மங்கைநல்லாள்பொன்னுருவி மசக்கைப்பெரிதாகி
அன்னநடையாள அமுதளிடம்பள்ளிகொள்வாள
மாதுநல்லபொன்னுருவி மசக்கைகுணமாகி
உப்பஞ்சீர்வேண்டாம உரியில்தயிர்வேண்டாம்
கா[illegible]வேண்டாம் கடையுந்தயிர்வேண்டாம்

எனக்குவிரும்பியது பூசினிக்காய்தானுமிஷ்டம்
ஐயர்குளத்தில் அரிசிவந்தால்சோறிறங்கும்
துய்யர்குளத்தில்தொராவந்தால்சோறிறங்கும்
பிள்ளையார்-கோவில்பிரசாதம் வந்தாலேசோறிறங்கும்
பாண்டிவளநாட்டார் பசலைவந்தால்சோறிறங்கும்
கட்டிலின்மேலே உறங்காளேகட்டழகி
மெத்தையின்மேலே உறங்காளேமெல்லியரும்
கட்டிலுமெத்தையும்வெறுத்ததுமெல்லியர்க்கும்
மெத்தையுங்கட்டிலும வெறுத்ததுமெல்லியற்கும்
முந்தானைப்போட்டு மொய்குழலும்பள்ளிகொண்டாள்
ஊற்றுத்தண்ணீர்சுரக்கும் உதகமிக்குப்பாலும்
அருகனையுந்தான்சகித்து ஆனந்தவாழ்மாரி
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

பெருந்திருவாள் தாதியை அழைத்து
தற்சடையையவரவழைக்கச்
சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
தாமக்கருங்குழலாள் தாதியைத்தானழைத்து
தோகைமயிலனையாள் தற்சடைப்பூநாயகத்தை
அனைநாழிக்குள்ளே அழைத்துவாதாதியென்றாள்
தாமக்குழலாளுந் தாதியதுகேட்டு
சொன்னசொல்தவறாமல் சுருக்காகத்தானெழுந்து
போனாளவள்தாதி பொன்னுபரணையின்னா
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் போனாளாந்தாதி
தோகைமயிலனையாள் தற்சடையாள்மாளிகைசென்றாள்
தோகைமயிலனையும் தற்சடையாள்மாளிகையில்
அவள்-ஆட்டமுங்கூத்துகளும் ஆரணங்குபார்த்திருந்தாள்
தாமக்குழலாளுமே தாதியவளுட்புகுந்து
செம்பொன்திண்ணைக்கிச் சேரவந்துதெண்டனிட்டாள்
அம்பொன்திண்ணைக்கி அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பிபெருந்திருந்து
மோதிரமின்னடி முடிமேலேகைதொழுதாள்
தோகைமயிலனையாள் தற்சடையாள்தான்பார்த்து
ஆர்பெண்ணேதாதி அறியவுனையுமென்றாள்
ஆர்பணியுமல்ல வடியேன்றிருப்பணிதான
மாநகரமாளும் மகாராசன்தேவியவள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
நீ-இங்குதான்வந்ததை எனக்கறியக்கூறுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளநாயகமும்
அனைநாழிக்குள்ளே அழைத்துவரவேணுமென்றாள்

அரசனுடையாள் பெருந்திருவாளது
அரண்மனைவந்தது

தோகைமயிலனையாள் அரசனுடையாளதான்கேட்டு
அவள் - ஆகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேநல்லதென்று
அவள் - அப்ப முகசுடத்துக்கொண்டு அமருமொன்றுகையமர்த்தி
கூடவேசோதிமின்ன கொப்பேரிடையாரும்
வீதியும்வீதி தெருவும்பலகடந்து
மாநகரமாளும் மகாராசனையாளிசென்றாள்
பேடைமயிலனைத்தாள் பெருந்திருவாளமுன்னேவந்து
என்னையழைத்தவகை எதனிசொல்லுமென்றாள்
உன்னையழைத்தது ஒன்றுகுறைவுமில்லை
ஆள பிறந்தாரோ ஆகாயமான்தேவியாக்கு
மாநகரமாளும் மகாராசன்தேவியாக்கு
காசிநாடாளும் கருணாகரதேவியாக்கு
போசகவருந்தக் காணப் பொன்னுருவிநாயகமும்
சோறெண்ணாதுகளைகளானே சொல்லொன்றுஞ்சொல்லாளே
கட்டிலின்மேலே படுக்காளேகாரிழையாள்
மெத்தையின்மேலே படுக்காளேமெல்லியாள்
கச்சாயம்வேண்டாளே காயுடைப்பத்தினியாள்
உப்பிட்டபண்டம் வேண்டாளே உத்தமியாள்
ஏதுபிடிக்கவில்லை இளங்கொடியாள்நாயகிக்கு
ஏதுமிரக்கமில்லை எப்படிக்கோபெண்பிள்ளை
நீ-ஆராய்ந்துபார்த்து அறிக்கையிடவேணுமென்றாள்

அரசனுடையாள் சாகிமையழைத்தது
பொன்னுருவிமையல சொன்னது

தோகைமயிலனையாள் அரசனுடையாளங்கே பார்த்து
தாழ்க்குழலாளை தாதியைத்தானழைத்து
காசிநாடாளுங் கருணாகரதேவியவா
மாநகரமாளும் மகாராஜன்தேவியவா
தானழைத்தேனென்றுசொல்லி நீயழைத்துவாருமென்றாள்
தாமக்குழலாளும் தாதியருந்தான்கேட்டு
அருளருநேமென்றுசொல்லி அப்படிக்கேயாகுமென்று
போறாளவள்தாதி பொன்னுப்பரணியிலாள
பொற்பிரப்பங்கோல்பிடித்துப் போறாளவள்தாதி
போதேவருந்தமானப் பொன்னுருவிமாளிகைசென்று
தென்றுடி பள்ளிகொள்ளும் சித்திரக்கூடமவந்து
வளைகொடிப்பள்ளிகொள்ளும் மாணிக்கக்கூடம்வந்து
செம்பொன்கிளிக்கிசை சேரவந்துதெண்டனிட்டாள்
அம்பொன்கிளிக்கு அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
மாநகரயாளும் மகாராஜன்றேவியர்க்கு
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
நீ-இவ்விடம்வந்ததை எனக்கறியச்சொல்லுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமாம்
உன்னை-அனைகாறிகைக்குள்ளே அழைத்துவரச்சொல்லுமென்றாள்
ஆகையினாலே அடியேனுமழைக்கவந்தேனம்மா
வாருமம்மாவென்றுசொல்லி வருந்தியென்னுடனிடு

பொன்னுருவை பெருந்திருவா
ளிடம்வந்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
அவள்-ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்றாள்
கால்சோரக்கைசோர கட்டழகிமெல்லியரும்
இடையும்நடை சோர்ந்துவரக்கருங்குழலும்
அஞ்சிவழிநடக்க அன்னம்போலேநடந்துவர
கொஞ்சிக்கொஞ்சிவழிநடந்தாள் தோகைமயிலினையும்
சித்திரவீதி தெருவுங்கடந்தாளடி.
தேரோடும்வீதி தெருவுங்கடந்தாளடி.
மாநகரமாளும் மகாராசன்மாளிகைசென்று
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்முன்னேவந்து
என்னையழைத்தவகை ஏதுவகைசொல்லுமென்றாள்
உன்னையழைத்தது ஒன்றுங்குறையுமில்லை
தோகைமயில்கண்ணாள் துர்ச்சனையாள்தானழைத்தாள்

துர்ச்சனையாள் பொன்னுருவியை
அலங்கரித்து கெற்பந்தரித்த
தைச்சொன்னது.

அதுக்குள்ளே துர்ச்சனையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
மல்லிகைப்பூக்கொண்டுவந்து மாதர்க்குமுன்னேவைத்து
இந்தாருமென்றாளே ஏலக்கருங்குழலாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
சரமல்லிப்பூவானால் சந்தோஷமாதருக்கு
குடமல்லிகைப்பூவானால் கொண்டாட்டம்மாதருக்கு
ஒருகையால்வாங்காமல் இருகையால்தான்வாங்கி
அவள்-இருகையால்தான்வாங்கி ஏந்திழையாள்வீற்றிருந்தாள்
தோகைமயிலனையாள் துர்ச்சனையாள்தான்பார்த்து
தேசத்தையாளும் திரியோர்திரப்பெருமான்
பூப்போட்டசேலை தந்தாரேயெந்தனுக்கு
பொன்போட்டசேலை தந்தாரேயெந்தனுக்கு
இருவருமாக சரிபார்ப்போம்வாருமென்று
மேல்சுத்து ஆடைதனை மெல்லியரும்தான்பார்த்தாள்
இதுபுதுமையிதுபுதுமை யாரெங்குங்கண்டதில்லை

தோகைமயிலனையே துற்சடையேயென்றுசொல்ல
இருவர்முந்தாணிகளை இழுத்தந்த துற்சடையாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிபட்டாடை
பற்றியிழுத்தாளே பாவைகருங்குழலும்
வட்டஸ்தனமழகும் மட்டில்வடிவழகும்
கட்டுகுழையழகும் கையில்வளையழகும்
மார்பில்ஸ்தனமழகும் மச்சத்தின்வடிவழகும்
மச்சவீடுபோலே மலர்ந்தஸ்தனமிரண்டும்
பச்சைநரம்பு பசுநரம்பைத்தான்பார்த்து
தோகைமயிலனையாள் துற்சடையாள்கூறலுற்றாள்
அக்கிபுரத்திற்கு அத்தனைபுத்திரனை
அத்தனைமைந்தர்களும் புத்திரராய்ப்பாது
புத்திரரென்றுச்சே பொன்னுருவிதான்கேட்டு
கோபம்பெரிதாகிக் கொம்பனையுங்கூறலுற்றாள
விளம்பிவிளம்பிநீ போடிவிளம்பிநீ
போடிவிளம்பிநீ பொல்லாததுற்சடையாள்
என்று-வீசிநடந்தாளே விசையுடனேபொன்னுருவி
அன்னநடையாள் அழகுவிடர்பன்னிகொண்டாள
தங்கத்தால்மெத்தை தழுவணையும்மேறலுற்றாள்
கண்ணாடிதான்றுடைத்து வடிவுகளைப்பார்க்கலுற்றாள்
மார்பில்ஸ்தனமழகும் மட்டற்றவடிவழகும்
மச்சவீடுபோலே மலர்ந்தஸ்தனமழகும
பச்சைநரம்பு பசுநரம்பைத்தான்பார்த்து
பிள்ளையிதுவென்று பொற்கொடியுங்காரிணைத்து
மைந்தரிதுவென்று மங்கையருந்தானினைந்து
கோபம்பெரிதாகிக் கொம்பனையும்மப்போது
மனதுகொதிகிறதே மாதுநல்லாளப்போது

பொன்னுருவி தன்கணவனுக்கிப
கருணைத்தாவித்தது.

இழிகுலத்தான்பிண்டத்தை இனிநீண்டப்போரேனோ
தேர்ப்பாகன்பிண்டத்தை தின்டேனிருவகையால்
சாதிகெட்டான்பிண்டத்தைச் சற்றாகிலுந்தின்டேன்
காசிவளநாட்டாரும் கருணையைவிட்டே. னேறு
கர்ப்பூரந்தின்று கருவைக்கலைப்பேனென்றாள
காசண்டைதின்று கருவைக்கலைப்பேனென்றாள்
இனியமருந்துதின்று இற்றுவிழக்காணேனென்றாள்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியணாத்தானழைத்தாள்
பிறந்துவளர்ந்து பிராயமிருபதாச்சு
இது[illegible]கொள்கண்டதில்லை இப்பெரியதுக்கத்தை
ஐயமா[illegible]ல்லாம் அடங்கலுமாண்டிருக்க
ஆச்சிமா[illegible]ல்லோரும் அடங்கலுமாண்டார்கள்

எனக்குவந்ததுக்கத்தை என்னென்றுசொல்லுவேன்
காஞ்சிவளநாடாளும் கருணாகரவாகேட்டு
கள்ளந்திருடனைப்போல் கட்டழகரோடிவந்து
மாயமருந்தாலே மயக்கினானெனையவன்
பார்த்தேனேயாமானால்பாணத்தாலேபோட்டிடுவேன்
அறிந்தேனேயாமானால் அம்பாலேபோட்டிடுவேன்
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
பிள்ளையுண்டாகுதென்பொல்லாதபட்டிமகன்

பொன்னுருவி கருவையழிக்க
எத்தனஞ்செய்தது.

பிள்ளைகலைக்கவேணும்பொற்கொடியேயிப்போது
மைந்தரைக்கலைக்கவேணும்மயிலனையேயிப்போது
கற்பூரந்தின்றாலேபிண்டங்கரைந்துவிடும்
உந்தனிடத்திலே கற்பூரமுண்டோவென்றாள்
கற்பூரந்தந்தாலே கட்டழகிநானிருப்பேன்
கற்பூரமில்லையென்றால் இப்போதுமாண்டிடுவேன்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியவள்தான்கேட்டு
வேணுமென்றகற்பூரம் அழைப்பித்துத்தாரேனென்றாள்
போனாளவள்தாதி பொன்னாபரணமுமாய்
பொற்பிரப்பங்கோல்பிடித்து போனாளவள்தாதி
வீதியும்வீதி தெருவும்பல தாண்டி
தேரோடும்வீதி தெருவும்பல தாண்டி
மாநகரமாளும் மகாராஜன்தேவியென்றாள்
தேசத்தையாளும் திரியோதிரப்பெருமாள்
அவர்-கொலுவிருக்குமேடையிலே சென்றவளாள்வந்துநின்று
சிங்காதனத்திற்கு முன்னாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதியாரும் [illegible]
போதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளும் திரியோதிரப்பெருமாள்
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்றிருப்பணிதான்
பிறர்பணியுமல்ல பெருமாளுடபணிதான்
போதேவருந்தடைகண் பொன்னுருவிதாதியென்றாள்
நீயிங்குவந்ததைஎனக்கறியச்சொல்லுமென்றான்

பொன்னுருவிதாதியை அனுப்பி திரி
யோதிரனிடத்தில் கற்பூரம்வாங்கி
வரச்சொன்னது.

உந்தனிடத்திலே கற்பூரம்வேணுமென்றாள்
மாதுநல்லபொன்னுருவி வாங்கிவரச்சொன்னார்காண்
கற்பூரம்வேணுமென்று கைதொழுதுதெண்டனிட்டாள்
தேசத்தையாளும திரியோதிரன்கேட்டு

கட்டழகிமாதருக்கு கற்பூரம்ஏதுக்கென்றான்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
அது-இன்னவகையென்று ஏதொன்றுநாமறியோம்
மாதுமயிலன்னையாள் வாங்கிவரச்சொன்னாள்காண்
தேசத்தையாளுந் திரியோதிரனுங்கேட்டு
கட்டழகிமாதருக்குக் கற்பூரம்வேணுமோதான்
வேணுமென்றகற்பூரம் வேண்டியதுநானேயென்றான்

பெருந்திருவான திரியோதிரனைக்கண்டு
கேட்கவேண்டாமென்றுமறுத்தது.

பேண்டமயில்கண்ணாள் பெருந்திருவாமோடிவந்து
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
ஊராளும்மன்னு ஒருவாதனைதீர்க்கனும்
நாடாளும்மன்னு நல்லவாதனைதீர்க்கனும்
சித்தடிக்குப்பொன்னுருவி நல்லவாதனைதீர்க்கனும்
ஐந்துதிங்களாச்சுது அங்கேதான்மாதருக்கு
கரும்புஅரும்பிட்டு கஸ்தூரிபூத்ததுபோல்
அலங்கத்தின்கீழ் கதலிமுளைத்ததுபோல்
அத்திமரம்பூத்ததுபோல் அன்னநடைபொன்னுருவி
மாதுநல்லபொன்னுருவி மைந்தருமுண்டானாள்
கற்பூரங்கின்றாளே பிண்டந்தரியாது
பிண்டந்தரியாது பொறற்கொடியாள்மாண்டிடுவாள்
கற்பூரமில்லையென்று கடுகவுரையுமென்றாள்

திரியோதிரன்பொன்னுருவிகர்ப்பந்தரித்
தனைக்கேள்வியுற்றுமனக்களிப்
படைந்தது.

தேசத்தையாளுந்திரியோதிரனுங்கேட்டு
பூரித்திருந்தோளும் பொன்னுரமயின்னா
இதோகுளிர்ந்து இருதோளும்பூரித்து
நாளும்மறிவேனெடி நலமானகாரியத்தை
தாமக்குழலாளைத்தாதியரைத்தானழைத்து
காஞ்சிநாடாளுங் கருணாகடையிலே
அங்கேயுண்டுகற்பூரமிங்கில்லையென்றுரைத்தார்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
போருளவன்தாதி பொன்னுரமயின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்து போருளவன்தாதி

பொன்னுருவிதான்கேட்டு
மாளிவந்தது.

காஞ்சிநாடாளுங் கருணருடவீதிவந்தாள்
காஞ்சிநாடாளுங் கருணருடமாளிகையில்
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமன்னவர்கள்
ஆர்-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்.

(நீ) ஏன்வந்தாய்தாதி எனக்கறியக்கூறுமென்றார்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
வாயைத்திறவாளாம் மறுவார்த்தைபேசாளாம்
மவுனமாயத்தானிருந்தாள் மாதுகருங்குழலும்
வாசற்படிகாக்கும் மன்னவாகளேதுசொல்வார்
கூடாதமங்கையற்கு கொம்பனையேதாதிகளா
வாழாதமாதுநல்லாள் மயிலனையேதாதிநீ
கன்னியவள்கற்பழித்த பேய்ச்சிகளோநீங்கள்தான்
பெண்ணவளைவாயழித்த பைங்கொடியேநீங்கள்தான்
தாய்போல்வளர்த்தெடுத்த தாதிகளுந்தான்கேட்டு
ஏதொன்றுஞ்சொல்லாமல் ஏலக்கருங்குழலும்
உட்கட்டில்போய்புகுந்தாள் உத்தமியாள்தாதியரும்
காசிவளநாடாளுங் கருணைப்பெருமாளும்
கனகமணிகட்டிலின்மேல் கருணைநம்பள்ளிகொண்டார்
தாமமுடியாளும் தான்பள்ளிகொண்டாளாம
தோகைமயிலனையாள சுடர்மணிநாயகரும்
உடன்பள்ளிகொண்டிருந்தாள் ஒளியுடையகண்ணாளும்

தாதிகள் கருணாகரற்பூரங்கேட்டது.

தாமக்குழலாளுந் தாதியருமோடிவந்து
செம்பொன்றிருவடிக்கு சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன்றிருவடிக்கு அழகாகத்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
காசிநாடாளுங் கருணாகரர்பார்த்து
(நீ) ஆருடையதாதி அறியவுரையுமென்றான்
தாமக்கருங்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
ஆருடையதாதியல்ல அடியேன்றிருப்பணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
போதேவந்தடங்கண் பொன்னுருவிதாதியென்றாள்
நீயிங்கேவந்ததென்ன எனக்கறியக்கூறுமென்றான்
ஏன்வந்தாய்தாதி எனக்கறியக்கூறுமென்றான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கும்
கட்டழகிமாதருக்குக் கற்பூரம்வேணுமென்றாள்
உந்தனிடத்திலே கற்பூரமுண்டென்று
வாங்கிவரச்சொன்னாளாம் மாதுகருங்குழலாள்
காசிநாடாளுங் கருணாகரர்கேட்டு
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
வாழாதபெண்களுக்கு கற்பூரம்வேண்டியதோ
கூடாதபெண்களுக்குக் கற்பூரம்வேண்டியதோ
என்னவொருபொருட்டாக் கற்பூரம்கேட்டாளோ

எந்தனையுங்கேட்க இங்கனுப்பிவைத்தாளோ
(அவளுக்கு) ஏதுக்குக்கற்பூரம் எனக்கறியச்சொல்லுமென்றார்

அறசடையாள் கருணருக்குச்சொல்லி
கற்பூரங்கொடுக்காமற்றடுத்தது.

தோகைமயிலனையாள் அறச்சடையாள்தான்கேட்டு
ஊராளுமன்னா ஒருவார்த்தைநீர்கேளும்
நாடாளுமன்னா ஒரு நல்வார்த்தைநீர்கேளும்
நானு மிளங்கொடியுஞ் சேரத்துயில்புரிந்தோம்
மாதுநல்லபொன்னுருவி மைந்தருமுண்டானால்
கரும்புகுறும்பிட்டு கஸ்தூரிபூத்தாற்போல்
கல்லாற்றுகளுள்ளே கதலிமுளைத்தாற்போல்
மலடுள்ளவாசலுக்கு மைந்தர்களுமுண்டாச்சு
அம்பலத்துவாசலுக்கு ஆண்பிள்ளைபெற்றிடுவாய்
கற்பூரந்தின்றாலே பிண்டந்தரியாது
பிண்டந்தரியாது பொற்கொடியாள்மாண்டிடுவாள்
செத்துமடிந்திடுவாள் சிவலோகஞ்சேர்ந்திடுவாள்
மாண்டுமடிந்திடுவாள் வைகுண்டஞ்சேர்ந்திடுவாள்
கற்பூரமில்லையென்று கடுகவுரையுமென்றாள்
காசினிநாடாளுங் கருணரவர்கேட்டு
தேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
நானுமறிவேண்டி நாயரிளம்பிறையே
எனக்குத்தெரியுமோதான் ஏலங்கருங்குழலே
வண்ணமணித்தோளன் பச்சைவடமுதறி
துப்பட்டிதானுதறி துரைமகன்தான்போர்த்து
முத்துப்பதியடியாம் மேற்குழல்கள் ரத்தினமாம்
செம்பொன்பதியடிமே லேறியந்தசீர்கருணர்
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவந்து
கொத்தம்பூமன்னவனை கொடைதானைதானழைத்தார்
கொத்தம்பூமன்னவர்கள் கொடைதானும்தான்வந்தார்
முத்துக்குடையாம் முழுமாணிக்கப்பொற்குடையாம்
தகைக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பொன்னுங்குடையாம் புகழுடையமுக்குடையாம்
எடுத்துவிரித்தார்கள் எண்ணாயிரங்கொடைகள்
பக்கமிருத்தார்கள் பதினாயிரங்குடைகள்
சுற்றியிருத்தார்கள் சூரியகாக்காரர்கள்
ஓமைக்குடைநடுவில் இருந்தத்தவத்தமனும்
பூச்சக்கிரக்குடைநடுவில் இருந்தப்புண்ணியனும்

கருணமகாராஜன்சாம்புவனை அழைத்துசகலவர்த்தகரும் கற்பூ
விற்காதிருக்கும்படி பறைசாற்றச்சொன்னது.

பறையறையும்மன்னவனை சாம்புவனைதானழைத்தான்

பறையறையுமன்னவர்கள் சாம்புவர்களோடிவந்து
தூரவிருந்து தொழுதிரங்கிதெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுபணியெம்பெருமாள்
என்றதுகேட்டு யேதுசொல்வார்கருணாரவர்
உன்னையழைத்தது ஒன்றுக்குறைவுமில்லை
அத்திபுரத்தில் அறுபதுகடை கண்டே
அந்தக்கடை தனிலே ஆறொருவர்கற்பூரம்
விற்றார்களானுக்கால் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஆரொருவர்கற்பூரம் கொண்டதையுண்டானால்
அவருக்குமேற்கே யுயிர்கழுவுபோட்டிடுவேன்
தாமமணிகட்டி தரித்துவைப்பேன்பூமியை
நாக்காடேழுக்கறிந்து நகர்விட்டுவோட்டிவைப்பேன்
அப்படிக்கென்று ஆரசுமுழக்குமென்றாள்

சகலராசருமறியும்படிச் சாம்புவர்கள்
பறையறைந்தது.

பறையறையுமன்னவர்கள் சாம்புவர்கள்தான்கேட்டு
அருளாருனுமென்னையா அப்படிக்கேயாகுதென்று
வெள்ளியால்பறைகொண்டு வெண்கலத்தால்தேர்தானி
யானையின்மேலேவைத்து அலங்காரம்போடலுற்றார்
அத்திபுரத்துப் பெருந்தெருவேவந்துநின்று
அடித்தார்தமுக்கோசை அந்நகரில்தானகேட்டு
சிலமன்னரெல்லாரும் திடுக்கிட்டெழுந்திருந்து
வர்த்தகரும்செட்டிகளும் வருத்தமுடன்தானெழுந்து
கடைக்காரரெல்லாம் கனமுடனேதானெழுந்து
என்னமோகாரணமோ ஏதொன்றுநாமறியோம்
பறையறையுமன்னர்களும் சாம்புவருந்தான்கேட்டு
காஞ்சிகொடாளுங் கருணரிடஉத்திரவு
இராஜாக்கள்காரியங்கள் நாமறியக்கூடாது
கஸ்திரியர்காரியங்கள் கலக்கம்வெளிப்படுமோ
இந்த-அத்திபுரத்திலே அறுபத்திரண்டுகடை
ஆறொருவர்கற்பூரம் விற்றதேயுண்டானால்
ஆறொருவர்கற்பூரம் கொண்டதேயுண்டானால்
அவருக்குமேற்கே உயிர்கழுவுபோட்டிடுவேன்
தாமமணிகட்டி தறித்துவைப்பேன்பூமியிலே
நாக்கோடேழுக்கறிந்து நகர்விட்டொட்டிடுவேன்
அப்படிக்கென்று அறைந்தேன்தமுக்கென்றான்
கடைக்காரர்தான்கேட்டு கலங்கிமனந்தளர்ந்து
கற்பூரச்சரக்கையெல்லாம்கட்டியொருபுரமாய்
கட்டியொருபுறமாய்க் கடலிலேவிட்டெறிந்தார்

இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
தாமக்குழலாளுந் தாதியவளேதுசெய்தாள்
தாமக்குழலாளுந் தலைவிரித்தோடலுற்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
வாசற்படிபிடித்து மயிலனையும்பார்த்திருந்தாள்
தாமக்குழலாளுந் தாதிகளுமுன்னேவந்து
கற்பூரத்துக்குபட்டகளையெல்லாம்போதுமென்றாள்
எந்தனுக்குங்கிட்டாது ஏலக்கருங்குழலே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
நீ-தாதிபொருத்தி தாமழிப்பாயென்றறியேன்
பொய்ப்பிபொருந்தி முன்னுரைப்பாயென்றறியேன்
அன்னநடையாள் வாழுதவிட்டபின்றிகொண்டாள்
கற்பூரங்கிட்டலையோ காளைமாதுபட்டணத்தில்
என்றுமவள்சொல்லி யிருக்கிறவேளையிலே

பொன்னுருவிதாதிகளை மாங்காய்க்கேட்டு
இன்மேல்இல்லையென்றுரைத்தது.

மயிலனையாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியைத்தானழைத்து
என்தன்தனக்கு ஒருமாங்காய்வேண்டுமென்றாள்
தாமக்குழலாளுந் தாதியருந்தான்கேட்டு
நான்-கற்பூரங்கொள்ள கடையெல்லாஞ்சுத்திவந்தேன்
காஞ்சிராளுங் கருணாரவர்பார்த்து
கடைகள்கடைத்தெருவில் கட்டியடித்தாரோ
கற்பூரத்திற்குப்பட்ட களையெல்லாம்போதுமம்மா
மாங்காயுங்கிட்டாது மாலைக்கருங்குழலே
உன்-மாமிபெருந்திருவாள் மயிலனையைகேட்டாலே
வேண்டுமென்றமாங்கனிகள் வேணதுதான்தருவாள்
அங்கேநீகேளுமென்றாள் ஆரணங்குதாதியரும்

பொன்னுருவிபெருந்திருவாளை
மாங்கனிகேட்டது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
மாமியார்மாளிகைக்கு வாறாள்மயிலனையாள்
மாமியுங்கண்டங்கே வாறாள்மயிலனையாள்
இங்கேயிருமென்று இனிகட்டும்தட்டலுற்றாள்
தட்டின்குழலுக்குந் தார்குழலாள்வீற்றிருந்தாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்பார்த்து
வேர்க்கவிரிவிரிக்க வந்தஅவசரமென்
னத்தொருகாரியத்தை வகைதெரிந்துகூறுமென்றாள்

போதேவருந்தடங்கண் பொன்னுருவிகூறுவாள்
ஆரங்கந்தானடி அம்மாநீர்தானடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் உஞ்சல்கயிறடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிநான்வீற்றிருந்தேன்
ஏதோவிடாபெரிசாய் மாங்காயாசையாச்சு
உந்தனிடத்திலே ஒருமாங்காய்வேணுமென்றாள்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
வேண்டுமென்றமாங்கனிகள் அனுப்பித்தாரோமென்றாள்
தோகைமயிலனையாள் துச்சளையாளோடிவந்து
ஊராருமாமி ஒருவார்த்தைநீர்கேளும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
மாங்காயுங்கேட்டாளே மாலைக்கருங்குழலும
ஒருமாங்காய்க்கீந்தாலும் மகனோடேபேசவைப்போம்
மாங்கனிக்கீந்தாக மகனுடன்பேசவைப்போம
மாங்காயுமில்லையென்று மாதற்குறையுமென்றாள்

பெருந்திருவாள் பொன்னுருவிபைய
உன்மாமனார் மாங்கனிகேளே
ன்றுசொன்னது

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
அப்படியேசம்மங்கதான் ஆரணங்குமப்பொழுது
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியை
உங்களம்மாளைகேட்டாலே தருவாளோமாங்கனியும்
அங்கேயுண்டு மாங்கனிகள் இங்கில்லையென்றுரைத்தாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
மாமனார்மாளிகைக்கு வாராள்மயில்போலே
தேசத்தழகன் திரியோதிரப்பெருமாள்
காஞ்சிநாடாளுங் கருணருடன்கூட
சாயம்புமேனி சகுனியவன்கூட
சொக்கட்டான்சூது சதிரங்கந்தானாடி
போகின்றமன்னருக்குப் போகவிடைகொடுத்து
அங்கிருந்தமன்னர்களை அனுப்பிவிடைகொடுத்து
தனியாகவீற்றிருந்தான் தாமமுடியானும்

பொன்னுருவிதிரியோதிரனை
மாங்கனிகேட்டது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும
மேமனேதிரில்வந்து மாலைக்கருங்குழலும்
வணங்காமுடியும் வயிரத்திரைகுழலாள்
மாங்காய்க்குத்தானாக மாமாவைதெண்டனிட்டாள்

தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
என்னவென்று தெண்டனிட்டாய் பிள்ளைகளைப்பெற்றிடுவாய்
தெண்டனிட்டகாரியம் தெரியவுரையுமென்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிகூறுவாள்
ஆரங்கத்தாளுடி அம்மானைத்தாளுடி
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைநாகால்மண்டபத்தில் ஊஞ்சல்கயிறாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிநான்வீற்றிருந்தேன்
ஏதோவிடாய்பெரிதாய் ஒருமாங்காய்வேணுமென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்தான்கேட்டு
மாங்கனிகேட்கவந்த மங்கையரைத்தான்பார்த்து
இத்தனைநாளில்லாதே இதுவெந்நாளன்றியிலே
நீமாங்காய்க்கேட்க காரியமேன்மங்கையரே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
உப்பஞ்சீர்வேண்டலையே உரியில்தயிர்வேண்டலையே
காட்டுநரிவேண்டினால் கச்சாயம்வேண்டில்லை
ஏதோவிடாய்பெரிசாய் ஒருமாங்காய்மனதாகி
ஒருமாங்காய்வேணுமென்று உத்தமியுந்தெண்டனிட்டாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்தான்கேட்டு
பூரித்திருந்தோளும் பொன்னுபரணமின்ன
வேணமென்றமாங்கனிகள் அழைத்துநான்தாரேனென்றார்

பெருந்திருவாள் திரியோதிரனை பொன்னுருவிக்குமாங்கனிகொடுக்கவேண்டாமென் சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளோடிவந்து
மானகக்கொண்ட மகராஜன்முன்னேவந்து
அவன்-கண்சாடைகாட்டினால் கமலப்பூநாயகியாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
தனியேயெழுந்துவந்தான் தாமமுடியானும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
மறைவாகவந்தாளே மாலைக்கருங்குழலும்
தேசத்தழகன் திரியோதிரனுடனே
மாலைமுடியானும் மயிலனையுங்கூறலுற்றாள்
ஊராருமன்னே ஒருவார்த்தைநீர்கேளும்
நாடாளுமன்னே நல்வார்த்தைநீர்கேளும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
மாங்காயுங்கேட்டாளே மாலைக்கருங்குழலும்
மாங்காயுமில்லையென்று மன்னவரேநீருரைத்தால்
மாங்காய்க்குத்தானாக மகனோடேபேசவைப்போம்

ஒரு-மாங்கனிக்குத்தானாகக் கருணருடன்பேசவைப்போம்
மாங்காயுமில்லையென்று மன்னவரேசொல்லுமென்றாள்
தேசத்தழகன் திரியோதிரன்தான்கேட்டு
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
திரோகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
அப்படிக்கேசெய்வேனென்றான் ஆனந்தவாழ்மார்பன்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து

திரியோதிரன் மாங்கனியில்லையென்று சொல்ல

பொன்னுருவி விசனமடைந்தது.

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்
காஞ்சிநாடாளுங் கருணருடசோலையிலே
அங்கேயுண்டுமாங்கனிகளிங்கில்லையென்றுரைத்தார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
ஊராளுமாபா ஒருமாங்காய்கிட்டாதோ
நாடாளுமாமா நல்மாங்காய்கிட்டாதோ
என்-ஐயமார்பாண்டியர்கள் அரசாளும்நாளையிலே
என்-ஆச்சிமாரெல்லோரும் இருக்கின்றநாளையிலே
சாக்கடைகள்தோறும் சரிந்துவிழுமாங்கனிகள்
அடித்துப்பழங்கொடுக்க ஆருண்டுவையகத்தில்
திட்டப்பழங்கொடுக்கப் பெண்காக்காய்யற்றுதே
என்றுசொல்லிமங்கையரும் ஏங்கிப்புலம்பலுற்றாள்
கூவியழுதாளே கொம்பிணைகிளிபோலே
கோபித்துத்தானழுதாள் கோயிலன்னப்போலாக
வாய்திறந்துதானழுதாள் மாதுநல்லபொன்னுருவி

பொன்னுருவி விசனப் படுவதைக்
கண்டு திரியோதிரன்மாங்கனி
கொடுக்கிறேனென்றது.

தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுத்தானெழுந்து
மன்னன்மனஞ்சலித்து ஒருவார்த்தையெடுத்துரைப்பான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமே
நாளை-மத்தியானவேளைக்கு வந்தாயேயாமானால்
வேணுமென்றமாங்கனிகள் அழைப்பித்துத்தாரேனென்றான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
அவள்-ஆகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேநல்லதென்றாள்
சந்தோஷப்பட்டாள் சரீரங்கள்பூரித்தாள்
அமர்ந்தகடையுடனே ஆனந்தவாழ்மாரி
அவள்-அன்னநடையுமே ஆவித்துப்பள்ளிகொள்ள

தங்கத்தால்மெத்தை தழுவணையின்மீதுசெல்வாள்
மாதுநல்லபொன்னுருவி மசக்கைகுணமாகி
மாதுநல்லபொன்னுருவி மாங்காய்மனதாகி
இப்படியாக இருக்கின்றவேளையிலே
பொழுதுவிடிந்தது பகவானும்வந்துதித்தார்
கங்குல்விடிந்தது கதிரோனுமவந்துதித்தார்
ஈஸ்வரனார்கோவிலுக்கு திருகாப்புசென்றது
தேசத்தழகன் திரியோதிரப்பெருமான்
பள்ளிவிட்டெழுந்திறங்கி பகையச்சீகண்ணன்
மாலைமுடியாளும் மல்லிகைப்பூவின்முதறி
பாலைவிரித்து பட்டாடைமேல்சாத்தி
முத்துமிதியடியைத்தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அம்பாகத்தான்கடந்து
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
வைகைக்கரைதனிலே வந்தாரேயப்பொழுது
முல்லைபெதம்பொடித்து முத்துப்போல்பல்விளக்கி
பாலைக்கொண்டுபல்விளக்கி முகங்கொண்டுவழித்து
தீர்த்தநீர்வாங்கி திருவாயுங்கொப்பளித்து
வசந்தநீர்வாங்கி மகிழ்முகமுஞ்சுத்திசெய்து
சிவசிவாவென்று திருநீறுகாப்பணிந்து
அரகராவென்று அக்கினிதாரோவென்றணிந்தா
பாலைவிரித்துடுத்த பட்டாடைமேல்போர்த்தி
முத்துமிதியடியைத்தொட்டுமிகநடந்து
வசந்தமணிமண்டபத்தில் மன்னனெழுந்தருள
அரசுநிலைமன்னவர்கள் அவசரமேயோடிவந்து
இட்டார்சிங்காதனங்கள் எழிலானமன்னனுக்கு
இட்ட சிங்காதனத்தில் எழில்மன்னனுமேற்றிருந்து
திரியோதிரன் தோட்டக்காரனை அழைத்து
மாங்கனிபறித்துவரச்சொன்னது
மாஞ்சோலைத்தோட்டத்து மாதலைவனைத்தானழைத்தான்
மாஞ்சோலைத்தோட்டத்து மன்னவரும்ஓடிவந்து
சிங்காதனத்திற்கு முன்பாகத்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றான்
தேசத்தையாளும் திரியோதிரன்தான்கேட்டு
உன்னையழைத்தது ஒன்றுக்குறைவுமில்லை
மாங்கனித்தோட்டத்தில் மன்னவனேபோய்புகுந்து
தினசுக்கொருமாங்கனியை தீவிரமாய்நீர்பறித்து
கூடையில்மாங்கனியை கொற்றவனேகொடுத்து
கடுகெனவேவாருமென்று கட்டளையுமிட்டார்கள்
மாஞ்சோலைகாக்கின்ற மன்னவருந்தான்கேட்டு

அவர் எட்டடியுமோரடியாய் எட்டிமிகநடந்து
மாங்கனிச்சோலையிலே மன்னவருமேபுகுந்து
வகைக்கொருமாங்கனியை வகைவகையாய்த்தான்பறித்து
கூடையில்மாங்கனியை கொற்றவனும்தானிரப்பி
தூக்கிநடந்தான் துரிதமுடனப்பொழுது
எடுத்துநடந்தாரே எழில்பெரியமன்னவரும்
தேசத்தழகன் திரியோதிரன்முன்னேவந்து

திரியோதிரனிடத்தில் தோட்டக்காரர்
மாங்கனிகொண்டுவந்துகொடுத்தது

கூடையில்மாங்கனியை கொற்றவனுக்குமுன்னேவைத்தார்
தேசத்தையாளுந் திரியோதிரனப்பார்த்து
மானஞ்சேலைக்காவலரை மன்னவருந்தானழைத்து
மாங்கனிக்கூடைதன்னை மன்னவன்தூக்குமென்று
பாளியமாமண்டபத்தில் வந்தாரேயப்பொழுது
பேடைமயில்கண்ணாளுமுடன் கட்டிலேபோயிருந்தாள்
கட்டிலின்கீழ்க் கைக்கொடிப் பரப்புமென்றார்
தட்டிட்டமாங்கனியைக் கொட்டிப்பரப்பிவைத்தார்
இப்படியாகவே இவரிருக்கும்வேளையிலே

பொன்னுருவிமறுநாள் திரியோதிரனிடத்து
இம்மாங்கனிக்காகவருந்துகிறது.

பொழுதுவிடிந்தது பகலவனும்வந்துதித்தார்
சந்தல்விடிந்தது சந்திரனும்வந்துதித்தார்
செகக்கண்மால்கே விழுங்க இருக்கப்புசென்றது
கோதைவருந்தங்கை பொன்னுருவிதானெழுந்து
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மசக்கையமனதாகி மாதுநல்லாள் பொன்னுருவி
மாமணிமாளிகைக்கு வாரணமயில்போலே
இப்படியாக விளக்கின்றவேளையிலே

பொருந்திருவாள் கருணனை அழைத்து
பொன்னுருவியுமசக்கைத்
தகவுஞ்சொன்னது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்தானப்பார்த்து
குந்திநாடாளுங் கருணனைத்தானழைத்தாள்
காந்திநாடாளுங் கருணராஜனும்வந்து
மாதாவின்பாதம் மலரடியில்தண்டனிட்டான்
என்னையழைத்தபணி ஏதுபணிசொன்னச்சி
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்கூறுவாள்
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கையமனதாகி
மாங்காயமனதாகி வருவாளேமயிலனையும்

தட்டியெழும்புவான் தாமக்குழலாளும்
பள்ளிகொள்ளுமென்றாளே பகையறுசீர்கண்ணாளும்
காஞ்சிநாடாளுங் கருணாகரவாகேட்டு
சந்தோஷப்பட்டார் சரீரங்கள் பூரித்தார்

பெருந்திருவாள் கருணையை திரியோதிர
னைப்போலசிங்காரித்துமுக்காட்டிடு
படுத்திருக்கச்சொன்னது.

அறுபத்துநால்முழக் கிழமைரானபச்சைவடம்
முக்காடுபோட்டு மூடிமன்னன்பள்ளிகொண்டாள்
அப்படிபோட்டு அணைமன்னனைபள்ளிகொண்டான்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகரும்
மாமனார்வாசலுக்கு வந்துநுழைந்தாளே
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளைதானப்பார்த்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகரும்
மாங்காய்தாரோமென்று மன்னாவைச்சொன்னார்
மாங்கனிக்காக வரச்சொன்னார் உன்மாமா
மாமாவுன்னைக்கேயென்றாள் பாங்காகுங்குழலும்

பொன்னுருவி திரியோதிரனெங்கேயெ
ன்றுபெருந்திருவாளைக்கேட்டது.

பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள் கூறுவாள்
தலைநோவுகண்டுதென்று தாமமுடியாளும்
முக்காடுபோட்டு மூடிமன்னாபள்ளிகொண்டார்
அப்பட்டிபோர்த்து அணைமன்னாபள்ளிகொண்டார்
வந்தசெனங்களெல்லாம் வாசலிலேகாத்திருக்க
போசனங்களுண்ணவில்லை பொற்கொடியேயுன்மாமா
தட்டியெழுப்புமென்றாள் தாமக்கருங்குழலும்

பொன்னுருவி மாமனைத்தட்டி
எழுப்பினது

அவள்-ஆகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேகல்லதென்று
மன்னவனார்தன்னருகில் வந்தாளேமெல்லியரும்
மாமா ஆடல்அடிசில் ஆறியிருக்கிறது
பட்டணத்துவெள்ளானை பஞ்சாங்கம்கேட்கவில்லை
பஞ்சாங்கம்கேட்கவில்லை பாலமுர்தம்கேட்கவில்லை
மதிப்பேப்பெரிசையா மாமாவெழுந்திரென்றாள்
காஞ்சிநாடாளும் கருணாகரர்கேட்டு
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கநகைத்தான்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து

மாமி-உடைய புகுலுக்கு உத்தமரும்பேசவில்லை
மற்றுமொருதரம் தட்டியெழுப்புமென்றாள்
மாமா-ஆடல் அடிசல் ஆறியிருக்கிறது
பட்டணத்துவெள்ளானை பஞ்சாங்கக்கேட்கவில்லை
பஞ்சாங்கக்கேட்கவில்லை பாலமுர்தமுண்ணவில்லை
நம்மோடேராஜாக்கள் பசியோடகாத்திருக்க
சரியொத்தராசாக்கள் தானைகெவிறறிருக்க
துய்யர்குலத்தில் துரோணருங்காத்திருக்க
எல்லாருங்காத்திருக்க என்மாமா எழுந்திரென்றாள்
தட்டியெழுப்பினாள் தாயகக்குருநழுலும
முகொடுக்கி முடிமன்னர்தான்பார்த்தார்
துப்பட்டிநீக்கி துரைமன்னர்தான்பார்த்தார்

பொன்னுருவிகருணனைப்பார்த்து அந்த
ப்புரத்தில் ஒளிந்துக்கொண்டது.

போதேவருந்தங்கண் பொன்னுருவிதான்பார்த்து
கருணர்திருமுகமுங் கலசதண்டங்கண்டவுடன்
திக்கென்றெழுந்திருந்து தேனனைக்கருங்குழலும
தேனனைக்கருங்குழலும திமிதிமின்றுடலுமற்றாள
மஞ்சனீராணையில்லை மாதவள்போயபுகுந்தாள
காஞ்சிபட்டாளுவ கருணனெழுந்திருந்து
அவள்-கூடத்தொடர்ந்தாபோய் கொற்றவனார்வீரியரும்
போதேவருந்தங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
பார்த்தார்பலகாலும் பங்கயஞ்சீர்கண்ணாளை

பொன்னுருவி கருணனைப்பார்த்தோடும்
போது மூர்ச்சையாய்விழுந்தது

அவள்-கைகால்கள்சோர்ந்து களையாயிருப்பதை
கண்ணாலேகண்டாரே ரட்சட்டமுகரப்பொழுது
அவள்-உள்ளமும்பூரித்து உடம்பும்விடவித்து
மாங்காய்க்குத்தானாக பாண்டாளே பொன்னுருவி
மாங்காய்க்குத்தானாக செத்தாளே பொன்னுருவி
செத்தாடி பொன்னுருவி வாடி பெருந்திருவாள்
மாண்டாடி பொன்னுருவி வாடி பெருந்திருவாள்
கூவியழைத்தாரே கொற்றப்பூராஜாவும
அழைத்தகொருசத்தத்தை ஆச்சியருந்தான்கேட்டு
பேடைமயில்கண்ணாள பெருந்திருவாளதானகேட்டு
அவள்-உள்ளமுருகி உடம்பாவிடவிட்டது
ஓட்டம்பொருந்தையாய் ஓடிவந்துமுன்னேநின்றாள்
தோகைமயிலனையாள் அற்சடையாளோடிவந்து
இருவருங்கூடியே வெதிராகவந்துநின்றார்
பேடைமயில்கண்ணாள பெருந்திருவாள்நாயகரும்
காஞ்சிநாயகரும் கருணருடன்வதுசொல்வார.

நான்செய்தவேலையல்ல நன்மையுள்ள என்மகனே
தோன்காயிலணையாள் துற்சனையாள் செய்தவேலை
காஞ்சிநாடாளுங் கருணாரவர்கேட்டு
தோகைமயிலனையே துரசனைப்பூநாயகமே
மாங்காய்க்குத்தானுக மாண்டாளோ பொன்னுருவி
மாங்காய்க்குத்தானுக செத்தாளோ பொன்னுருவி
மசக்தாளோ பொன்னுருவி சேர்ந்தெழுவு காணுமென்றான்
கொண்டாளோ பொன்னுருவி மாரிழுவு காணுமென்றான்
தோகைமயிலணையாள் துற்சனையாள் காணகேட்டு
செத்தாள்பிழைத்தாக்கால் எனக்கென்னதாராயோ
கொண்டாள்பிழைத்தாக்கால் எனக்கென்னதாராயோ

கருணர்பொன்னுருவியை மடியிலெடுத்துக்
கொண்டு சந்தோஷமடைந்தது.

வாரியெடுத்து வலதுதொடையில்வையும
காஞ்சிநாடாளுங் கருணாரவர்கேட்டு
வாரியெடுத்து வலதுதொடையில்வைத்தான்
கட்டியெடுத்து கருணர்தொடையில்வைத்து
வன்னியரைத்தான்பார்த்து கருணர்அழுகலுற்றார்
அப்படியுர்தானழுக அந்நேரவேளையிலே
கருணரின் காக்குங் கஸ்தூரிப்பொன்வாசனையால்
மூர்ச்சைதெளிந்து எழுந்தாள்மூருகுழலாள்
கருணர்திருமுகமும் கலசகுண்டங்களுடன்
தேனும்கருங்குழலும் திமிதிமியென்றோடலுற்றாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகமும்

பொன்னுருவி தன்னரண்மனை
வந்து சேர்ந்தது

ஓட்டமநடையுமாக ஒருநொடியிலோடிவந்து
ஆணந்தவாழ்மார்ப னரண்மனையிலும் புகுந்து
அன்னநடைபொன்னுருவி அழுதவிடம்பள்ளிகொண்டாள்
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாதுநல்லாள்பொன்னுருவி மாங்காய்மனதாகி
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

கருணர்தோட்டக்காரரை அழைத்து
மாங்கனிபறித்துக்கொண்டு
வரச்சொன்னது.

காஞ்சிநாடாளும் கருணர்பெருமானும்
மாமரத்தோப்புதனில்மன்னவரும்போய்ப்புகுந்து
மாங்கனிக்காவலரை மன்னவனுந்தானழைத்தார்
மாங்கனிக்காவலர்கள் மன்னவர்களோடிவந்தார்
என்னவேணுங்கனி எனக்கனிகொள்வமென்றார்

உன்னையழைத்தது ஒன்றுங்குறையுமில்லை
வகைக்கொருமாங்கனியை வரிசையாய்த்தான்பறித்து
நினுசுக்கொருகனியை திரமாயநீ பறித்து
கோணியில்மாங்கனியை கொட்டிப்பொட்டணைகட்டி
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
அவளுடையமாளிகைக்கு அனுப்பவேணுமென்றான்
மாங்கனிக்காவலர்கள் மன்னவர்கள்தான்கேட்டு
அவர்கள்-ஆகட்டுமென்றுசொல்லி அக்கணமேதானடந்து
மாங்கனிச்சோலையிலே மன்னவருட்புகுந்து
கொம்பில்பழுத்திருக்கும் கோதுபடாமாங்கனியும்
கிளைகளின் ஓரத்தில்காய்த்திருக்கும்மாங்கனிகள்
வகைக்கொருமாங்கனியை வகைவகையாய்த்தான்பறித்தார்
நினுசுக்கொருகனியைத் திரமாயத்தான்பறித்தார்
கோணியில்கொட்டிப்பொதிகட்டினார்காவலரும்
தூக்கியெடுத்தார்கள் துரிதமாய் மெய்யாய்நடந்தார்
காஞ்சிநாடாளுங் கருணரும்பின்தொடர்ந்தார்
மாந்தோப்பைவிட்டு மன்னவர்கள்வாராகள்
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாடோடும்வீதிவிட்டுமன்னவர்கள்வாராகள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிவந்தார்
காஞ்சிநாடாளும் கருணர்பெருமாளும்
மாணிக்கத்தூணருகே மறைவாகத்தானிருந்தார்
இப்படியாக இவிருக்கும்வேளையிலே

காவலர் பொன்னுருவிக்கு மாங்கனி
கொண்டுவந்து கொடுத்தது

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியும்
கொண்டுவந்துகொட்டினார்கள் கொற்றவருமாங்கனியை
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
விழியாதகண்கள்ரெண்டும் விழித்துமேதான்பார்த்து
திறவாதகண்கள்ரெண்டும் திறந்தவளும்பார்த்து
இதுவேதுமாங்கனிகள் எனக்கறியச்சொல்லுமென்றாள்
ஆர்தந்தார்மாங்கனிகள் அறியவுரையுமென்றாள்

காவலர்கள் பொன்னுருவிக்கு கருணர்
கொடுத்த மாங்கனியென்று
சொன்னது.

அப்போதுதானவர்கள் அடிவணங்கிச்சொல்லுகிறார்
காஞ்சிநாடாளும் கருணரவர்கொடுத்தார்
இந்தாருமென்றுசொல்லி எடுத்துக்கொடுத்தார்கள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
கதித்துத்தலைவண்டி கண்கள்பொறிபறக்க
நீலவிழிக்கண்கள் நெருப்புத்தணலாக

பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து
இழிகுலத்தான் மாங்காயைத் தீண்டவேநீயுண்டோ
தேர்ப்பாகன்மாங்காயைத் தீண்டேனிருகையால்
சாதிகெட்டான்மாங்காயைக் கண்ணாலேபார்ப்பதுண்டோ
என்று-வீசியபத்தாளே வேல்பொருதுகண்ணுளும
எடுத்துமெறிந்தாளே இருகையால்மாங்கனியை
பார்த்துமவள்பறக்கடித்தாள் பைங்கிளியாளப்பொழுது
எடுத்துநடவுமென்றாள் ஏலக்கருங்குழலும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பொன்னுருவி கருணன்கொடுத்த மாங்கனி
வேண்டாமென்று காவலாவசம் அனுப்பிவிட்டது.

அப்போ-காஞ்சிநாடாளுங் கருணராஜா பார்த்து
கதித்துத்தணலடிக்கக் கண்கள்பொறிபறக்க
நீலவிழிக்கண்கள் நெருப்புத்தணலாகி
செற்றியபுருவம் நெருப்பாய்ப்பலபறந்து
பற்றியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகமாய்
ஸ்ரீமுழுமாகொள்ள திருமாலனைவாயிலுள்ளோ
கட்டிவரும்பாமக்குங்கள் காவலர்கள்வாசலிலே
இத்தனையுங்கண்டிருந்தாள் ஏலங்கமழ்குழலாள்
நான்-அனுப்பினமாங்கனியை ஆணங்கெத்தான்வேண்டாள்
மன்னவனைத்தானழைத்து மாங்கனியைத்தாக்குமென்றான
அப்போதுதூதுவர்கள் அவசரமாய்த்தானெழுந்து
மாங்கனியைத்தானெடுத்து மன்னர்கடக்குமுறா
தங்கள்தங்களமாளிகையில் தான்கொடுத்தார்தூதுவர்கள்
இப்படியாக இவிருக்கும்வேளையிலே

பொன்னுருவி தாதியையழைத்து மருவூருக்குப்
போய மாங்கனி கொண்டுவரச்சொன்னது.

போதேவருந்தங்கள் பொன்னுருவிநாயகியும்
மாதுநல்லாள்பொன்னுருவி மசக்கைக்குணமாகி
மாங்காயமனதாகி மாதுநல்லாள்பொன்னுருவி
தாய்போல்வளர்த்தெடுத்த தாதியைத்தானழைத்து
மாங்காயவதைத்துமாங்கனிபோல்பொன்னெடுத்து
பொன்னையெடுத்து புறப்படத்தானிருந்தாள்
அப்போது-இவ்வூரைவிட்டு மறுவூருபோகுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாதியவள்கேட்டு
எலுமிச்சம்பூப்பட்டு இழுத்துவரிந்துடுத்தி
பஞ்சவர்ணப்பூப்பட்டு பாங்கிவரிந்துகட்டி
நமத்துவிர்படலெடுத்து நன்றாமவரிந்துடுத்தி
பொன்னையெடுத்துக்கையில்பிடித்து புறப்பட்டாள்தாதியவள்
பெற்றவளதாதி பொன்னுபணமின்ன

பொன்னுருவி மசக்கை.

பொற்பிரப்பங்கோல் பிடித்துப் போறாளவள் தாதி
தெத்துத்தெருதாண்டி சேரோப வீதிவிட்டு
மாடோம்வீதிவிட்டு மாங்காயவனம் போகலுற்றாள்
அவ்வூரைவிட்டு மறுவூரைப் போய்நடந்தாள்
அந்தத்தலங்களெல்லாம் அலைந்தாளே மாங்கனிக்கு
தேசநாடுகளெல்லாம் திரிந்தாளே மாங்கனிக்கு
எங்கெங்குஞ் சுத்தினாலும் இளமாங்காய் கிட்டவில்லை
தேசங்கள் சுத்தினாலும் சிறுமாங்காய் காணவில்லை
மாந்தோப்புச் சோலையெல்லாம் மாமரமாயிருக்குது
காய்ச்சதொரு மாங்காயைக் காணக்கிடையாது
மாங்காய்க்கிணையாய் தேமாலைக்குருங்குழலும்
மாங்கனிக்குத்தான் கொண்டுவந்த பொன்னைத்தனைக் கொண்டு
பொன்னைப்பட்டியில் வைத்துப் புறப்பட்டாள் தாதியரும்
எட்டியும் ஓரடியாய் எட்டிநடந்து
பத்தடியும் ஓரடியாய்ப் பதறியவள் நடந்து
போதேவருக்கு கண்ணான பொன்னுருவிக்கோ சொல்வாளாம்
போதேவருக்கு கண்ணே பொன்னுருவி நாயகமும்
வாசற்படி பிடித்து மாதரந்த பொன்னுருவி
மாங்காய் வருமென்று வழிபார்த்துக் கொண்டிருந்தாள்
இப்படியாக யிவளிருக்கும் வேளையிலே

பொன்னுருவி அனுப்பிய தாதி வந்து
எங்குமே மாங்காய் அகப்படவில்லை
என்று சொன்னது.

தாய்போல் வளர்த்தெடுத்த தாதியவளோடி வந்தாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவி நாயகமே
மாங்காயகப்படலை போதுமென்றாள் தாதியவள்
தேசம் பதினாறும் திரிந்து வந்தேன் மாங்கனிக்கு
வையகமெல்லாஞ் சுற்றி வந்தேனே மாங்கனிக்கு
எங்கெங்குந் தேடியினியவள் மாரியந்தேன்
மாங்காய்மாமிருக்குது மாங்காயைக் காணவில்லை
தழைந்தமரமிருக்கும் சிறுபிஞ்சுகளில்லை
எங்களுக்குக் கிட்டாது ஏலங்குருங்குழலே
என்றுமவளுரைத்து இந்தாரும் பொன்னையென்று
கையில் கொடுத்தாளே கட்டழகி தாதியரும்
பொற்கொடியும் வாங்கி பொட்டியில் வைத்துக்கொண்டாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவி நாயகிக்கு
அந்த மாதரிளங்கொடிக்கு மசக்கை துணையாகி
மாதரிளங்கொடிக்கு மாங்காய் மனதாகி
மாறாட்டங்கொண்டு மௌனமாய்த் தானிருப்பாள்
அன்னபானம் அருந்தாளே ஆரணங்கு
உப்பஞ்சிரவேண்டாள் உரியில் தயிர்வேண்டாள்
காளாஞ்சி தீண்டாள் கமலம்பூவாயிழையும்

மூக்காணி போட்டு முருகுழலாள் பள்ளிகொள்வாள்
கண்டவிடங்களிலே காரிழையும்பள்ளிகொள்வாள்
இப்படியாக இவளிருக்குமவேளையிலே

பொன்னுருவி இரண்டாவது ஒருதாதியை மாங்கனிக்கு அனுப்பினது.

ஆரணங்குமாதருக்கு ஆயிரம்பேர்தாதியுண்டு
ஆயிரம்பேர்தாதிகளில் அதிலேயொருத்தியவள
அப்போது தாதியவள் அன்பாகவங்கேவாறாள
மாஞ்சோலைதேடியவள் மகிழ்வுடனேவாறாளே
மங்கைதானவாறாளவள் எழிலானதாதியவள
தெத்துத்தெருத்தாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாஞ்சோலைக்காக மகிழ்ச்சியுடன் தானவந்து
கருணையுடமாஞ்சோலைக்குள் கட்டழகிபோகலுற்றாள
கருணையுடமாஞ்சோலைக்குள் கட்டழகிபோகலுற்றாள
கருணையுடமாஞ்சோலை காதத்துக்கும் மன்னாகளில்
அப்பெரியசோலைகாக்கும ஆயிரம்பேர்மன்னாகளை
ஆயிரங்காவலாக்கும அதிகாரிதானொருவன
அதிகாரியானவருக்கும ஆரணங்குதாதியாக்கும
காணுங்காடாளுக்கு கருணையுடதானுக்கும
பேர்தேவருக்கடங்கண பொன்னுருவிதாதியர்க்கும
பெத்தப்பழக்கமுண்டு வெல்லபொருதுமகண்ணனுக்கு
ஆணவமுமுண்டு அடிநாளகொடுப்புண்டு
அந்தவுறவாலே ஆரணங்குதாதியவள
மாஞ்சோலையுட்புகுந்து மன்னவனைத்தேடிவந்தாள
தழைத்தமரத்தடியில் தான்பள்ளிகொண்டிருந்தன்
ஆரணங்குதாதியரும அதிகாரிதனைவந்து
உற்றவுறவுமுறை வறண்முறைகாரியமும
பக்குவத்துடன் பாதகியகாரியங்களும
மற்றவிசேஷமெல்லாம் மாதவளசொல்லி
அதிகாரன்பின்னேவந்து தலைபார்த்துக்கொண்டிருந்தாள
தலைபார்க்கும்பாவனைபோல் சாதியவளதுசொல்வாள
மன்னனைமுழுக்கநோக்கி மாதுஎடுத்துரைப்பாள்
போதேவருக்கடங்கண பொன்னுருவியதுக்கு
மாதுளங்கொடிக்கு மசக்கையதிகரித்து
தொன்னூறுநாளாக அன்னமதுவுண்ணவில்லை
படுக்கப்பொருந்தவில்லைபாவையிளங்கொடிக்கு
மாங்காய்மேலேவாஞ்சை மாதுளங்கொடியும
இந்தச்சோலையிலே ஒருமாங்காய் வேண்டுமென்றாள
அந்தவனைக்கேட்டு ஆணழகன்தனதுசொல்வான்
ஏதேதுதாதியென்று பெருமுகமாய்ப்பார்த்து
திருமுகம்பார்த்து தாவேந்தனுடக்கலுற்றான்
[illegible] மன்னவர்க்கோ என்மாங்காய்க்கொள்ளைவிட

மாங்காயென்றுரைத்தசொல்லை மன்னவனார்தான்கேட்டால்
வாயைக்கிழித்திடுவார் மண்டையுடைத்திடுவார்
எழுந்துநடவுமென்று எதிரிணாத்தலுற்றான்
இந்தசொல்சொன்னமட்டும் இனிபிருக்கலாகாது

தாதி கருணனுடையதோட்டத்தில் ஒருமாங்காய்திருடிவந்து
பொன்னுருவிக்குக் கொடுத்தது.

அப்போதுதாதியவள் ஆரணங்குநாயகியாள்
ஓடிவரும்வேகத்திலே ஒருமாங்காய்தான்பறித்தாள்
ஒருமாங்காய்தான்பறித்து உள்மடியில்தான்சொருகி
மாங்கனிச்சோலையை தாண்டினாள்மங்கையரும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
கைகால்கள்சுத்திசெய்துக் கட்டழகிவுட்புகுந்தாள்
மாங்காய்கறிசமைக்க மாதுநல்லாள்ஏதுசெய்வாள்
மாலைக்குழலாளும் மாங்காயதுநிரித்து
வுப்புக்கொருகீத்து திருக்கினாள்மங்கையரும்
கடுக்குக்கொருகீத்து கலந்துப்பிசிரினாள்
மாங்காய்க்குவெந்தயங்கள் மயிலணையாள்சொப்பனிட்டாள்
பத்துவிதப்பச்சடியும் பதமாய்த்திருக்கினாள்
குழம்புபொரிககறியும் கூட்டமுதுதான்செய்தாள்
தயிர்சேர்ந்தபச்சடியும் தாளித்தாள்தையலரும்
புளிசேர்ந்தபச்சடியும் செய்தாளேபொற்கொடியும்
அவியல்துவையலது அவித்தாளே ஆரணங்கு
தித்திப்புமாங்கனிகள் தெருட்டும்படிசெய்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
மாங்காய்சமைத்தாச்சு மாதரிளங்கொடியே
போசனங்களுண்ணுதற்குப் பொற்கொடியேவாருமென்றாள்

தாதிகள் பொன்னுருவிக்குப் போசனஞ்
சமைத்துப்போட்டது

அந்தவுரைகேட்டு ஆரணங்குபொன்னுருவி
திட்டெனவெழுந்திருந்து தேனேகருங்குழலாள்
மஞ்சநீர்சாலையிலே மயிலனையும்வந்துநின்று
காலோடுகையும் கனிவாயுஞ்சுத்திசெய்து
மாரோடுதோளும் மதிமுகமுஞ்சுத்திபண்ணி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
பத்திரம்போட்டுப் பகவானைக்கைதொழுது
தும்பைமலர்போட்டுச் சூரியனைப்பூசைபண்ணி
சுத்திவினையவந்து செவிதனிலேபூச்சொருகி
அம்மையென்னுமாது அரண்மனையில்சென்றாள்காண்

அங்கொருநாளி அறிவுடையானோடி வந்து
வட்டமணை போட்டு வண்மையுடன் குந்தவைத்து
வாழையிலை போட்டு மணிச்செம்புநீர் தெளித்து
தும்பைமலர்போல சிறுகோளே போசனங்கள்
ஆயிரத்தெட்டுவிதமாச் சமைத்திருந்த மாங்கனியை
வைத்தவிதமாய்த்தான் எடுத்து வட்டித்தாள் மாதருக்கு
*போதேவந்த நாசண் பொன்னுருவிநாயகியாள்
பூரித்திடத் தோளும் பொன்னுடைய மின்னா
சந்தோஷப்பட்டுச் சரீரங்கள் பூரித்து
தொண்ணூறு நாள்கருணைக்குறைத்த போசனத்தை
மாங்கனியைத்தான் பார்த்து வாரியமுது கொண்டாள்
வாரியமுது கொண்டு வண்ணமுகம் சுத்திபண்ணி
கைகால்கள் சுத்திபண்ணி கனிவாயும் கொப்பளித்து
வாயுங்கொண்டுவாய் துடைத்து உத்தமியாள் போய்நடந்தாள்
கட்டிலின்மேல் படுத்து கன்னியாளுங் கட்டழகி
தனையே மறந்தாளோ தாமக்கருங்குழலாள்
நினைவு மறந்தாள்போல நித்திரை செய்யலுற்றாள்
இப்படியாக இவளிருக்குமவேளையிலே

கருணா பொன்னுருவிக்கு மாங்கனி கிடைத்ததோ வில்லை
யென்கிற சந்தேகந்தெளியும்படி அவளுடைய மாளிகை
வந்து மறைந்திருந்து பார்க்கிறது.

காஞ்சிகோட்டானும் கருணர் சிகாமணியும்
மாங்கனிதன் வாசனைக்கு கண்ணெல்லாம் மணவலையும்
போக்குவருந்த காணப் பொன்னுருவியாளிடஞ்சென்று
பளிங்கறைமண்டபத்தே சுற்றிப்பார்க்கலுற்றான்
அந்தச்சமயத்தில் ஆரணங்கு பாதங்களை
உண்டுமாங்கனியைத் திண்ணபடியாலே
காணுதமாங்கனியைக் கண்டபடியாலே
குட்டைப்பிரட்டி எதித்தாளே வாங்கியவள்
அவளெடுத்தவாந்தி அன்பான மாங்கனியை
காஞ்சிநாடாளும் கருணன் பார்த்து
தானினங் கண்டுடனும் அப்படித்தானெடுத்து
வாயிலெடுத்ததெல்லாம் வாங்கினான் தன்கையிலே
வாங்கிநடந்தானே மாசனமாளிகைக்கு
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் முன்னே வந்து
ஆரணங்கு ஆசசியோ அன்னையுடை தேவியோ

கருணர் பெருந்திருவாளைக்கண்டு பொன்னுருவிக்கு மா
காய்கொடுத்தவர் ஆரென்று கேட்டது.

மாதரினக்கொடிக்கு மாங்காய்க்கொடுத்தவர்யார்

ஆர்கொடுத்தார் மாங்கனிகள் ஆச்சரியரோ நீதுரையும்
கொடுத்தவனைக் கண்டாலே கொல்லத் துணிந்திடுவேன்
ஊருக்கு மேற்கே உயிர்க்கழுவில் போட்டிடுவேன்
தாமமணி கட்டித் தறித்திடுவேன் பூமுடியை
அந்தவுரை கேட்டு ஆரணங்கும் ஏது சொல்வாள்

பெருந்திருவாள் நான் கொடுக்கவில்லையென்று
கருணருக்குச் சொல்வது.

தேசத்தையாளும் திரிலோகா திரப்பெருமான்
அன்றொருநாள் வேளையிலே அழைத்தந்த காவலரை
மாங்காயைக் கொண்டு வாச்சொல்லி மன்னவரும்
கட்டியின் கீழாகக் கொட்டிடு மாங்கனியை
மாங்கனிக் காவலல்லோ மாதரிளங் கொடியாள்
அவளொன்று உன்னை எழுப்பியுமாரணங்கு
உந்தன் முகம் கண்டவுடனே ஓடியவள் பதுங்க
மஞ்சணீர் சோலையிலே மாதரவள் சேர்ந்துவிட்டாள்
அன்று முதலின்றொருநாள் ஆரணங்கு மாதருக்கு
மாங்காய்கள் கொடுத்ததில்லையென் மாதரிளங் கொடிக்கு
கொடுத்ததே வுண்டானால் கொல்லத் துணிந்துவிடும்
தாமமணிக் கட்டி தறித்துவிடும் பூமுடியை
என்றுமவளுரைத்து இருந்தாளே பெருந்திருவாள்
காஞ்சிநாடாளும் கருணரவர் கேட்டு
மாங்கனிச் சோலையிலே வந்தார் கருணரும்

கருணர் தோட்டக்காரனை அழைத்து பொன்னுருவிக்கு மாங்
கொடுத்தவரார் என்று கேட்டது.

மாங்கனிக் காவலரை மன்னவனும் தானழைத்தார்
ஆயிரம் பேர் காவலர்கள் அன்பாக ஓடிவந்தார்
கருணரடி வணங்கிக் கட்டழகனிற்கலுற்றான்
என்னையழைத்த பணி யேது பணி சொல்லுமென்றார்
கருணரது கேட்டுக் கட்டழகரேது சொல்வார்
ஆயிர மன்னர்களே ஆணழகர் நீங்களெல்லாம்
இப்பெரிய சோலையிலே யிருந்தீர்களெல்லாரும்
மாஞ்சோலைக் காவல் இருந்தீர்கள் மன்னர்களே
போதேவருந்தட்டங்கண் பொன்னுருவி நாயகிக்கு
ஆர் கொடுத்தீர் மாங்காய் அறியவுரையுமென்றார்
எவர் கொடுத்தீர் மாங்கனிகள் எனக்கறியச் சொல்லுமென்றார்

பொன்னுருவிதாதி எங்களைக் காணாமல் மாங்காய் பறித்திருக்க
வேணுமென்று காவலர்கள் சொன்னது.

என்னையா நீர்கேளும் எங்களுடன்வார்த்தை
ஆயிரம்பேர்காவலர்க்கு அதிகாரியானவனும்
மாமரத்தின்கீழாக மன்னவனும்பள்ளிகொண்டார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியவள்
மாதரிளங்கொடியாள் மயில்போல்நடந்துவந்து
தாமமுடியாற்குத் தலைபாரதுகொண்டிருந்தாள்
இருவருமபேசியல்லோ இனியசன்னைடபண்ணினார்கள்
ஒருவர்கொருவராகத்து சமசன்னைடபண்ணினார்
சன்னைடபண்ணுமவேளையிலே நடந்தாளேதாதியரும்
அதிகாரிதானெழுந்து அடித்துத்துரத்தலுமுற்றா
உற்றபெருமசேனையிலே ஓடினாள்தாதியரும
ஓடினாளுடந்தமேலே ஒருமாங்காயகிள்ளினாளோ
கிள்ளிப்பறித்தாளோ இன்மொழியாள்நாயகியும
ஒடிப்பறித்தாளோ வுத்தமியாள்தாதியரும
தாமக்குநங்குழலாள தாவிப்பறித்தாளோ
ஏதுமறியோமென்று சொன்னார்களகாவலர்கள்

கருணர்பொன்னுருவி வீதியில் காவலரிலொருவனைக் கட்டியடித்தது.

காஞ்சிநாடாளுமகருணராஜாகேட்டு
உத்தமனார்காவலற்கு வுளமர்மந்தானுரைத்து
போதேவருந்தடங்கண் பொன்னுருவி வீதியிலே
கட்டுங்கயிறெடுத்துக் காவலரோவாருமென்றான்
அடிக்குங்கயிறெடுத்து வாருமென்றான் ஆணழகன்
அந்தவுரைகேட்டு அழகானகாவலர்கள்
கட்டுமகயிறுகளும் கையில்பிரப்புகளும
மாங்காய்கொடுத்தவொருமன்னனுடனாக
போதேவருந்தடங்கண் பொன்னுருவிவீதிவந்து
மாங்காய்த்திருடிக் கொடுத்தவொருமன்னவனை
துன்னிலங்கண்ணார்கள் தொயரதில்கட்டினார்கள்
மாறுமுள்ளமன்னவனை மறுமமாய்க்கண்காட்டி
கருணரவர்கண்காட்ட கண்டந்தக்காவலரும்
கையில்பிரமபெடுத்துக் காவலாகளேதுசெய்தார்
வீசியடிக்கலுற்றார் மேலானமன்னவனை
தாவியடிக்கலுற்றார் தார்வேந்தரெல்லாரும்
எட்டிமயிர்பிடித்து கட்டியடிக்கலுற்றார்
அடிபட்டமன்னவனும் அலறியேகூறலுற்றான்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுக்கூவினான்
அடிபொறுக்கமாட்டாதே யலருகிறான்மன்னவனும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

மாங்காய்கொடுத்தகாவலனைகருணர் அடிப்பதைநிறுத்தும்படி
தாதி பொன்னுருவியிடத்தில் சொல்லிக்கொள்வது

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதாதியரும்
மாங்காய்திருடிவந்த மாலைக்கருக்குழலும்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
மாங்காகொடுத்தவொரு மன்னவனும்பாருகிறான்
கருணருடைகையாலே கைலாசஞ்சேருகிறான்
மாங்காய்க்குத்தன்னாலே மாளவோமன்னவனும்
காஞ்சிநாடாளும் கருணர்பெருமானுக்கு
மூத்தாளவாய்ப்பிறந்து விஸ்தாரம்சொன்னாலே
காஞ்சிநாடாளும் கருணர்மனம்பொறுத்து
அடியைவிலக்குவார் ஆனந்தவாழ்மாரி
என்றுமவளுரைக்க ஏதுசொல்வாள்பொன்னுருவி

பொன்னுருவிதன்னிடத்தில்வந்துசொல்லிக்கொண்டதாதியின்
இஷ்டப்படி மன்னவருத்தத்துடன் சொல்லியனுப்புகிறது

தாதிமுகம்நோக்கி தார்குழலாள்ஏதுசொல்வாள்
பிள்ளைபெறவேணுமென்று பெரியதவஞ்செய்தேனே
மைந்தன்பெறவேணுமென்று மாதவங்கள்செய்தேனே
போதுமடிஎந்தனுக்கு புத்திரனாய்வந்தகொள்ளை
என்றுமனஞ்சலித்து ஏதுசொல்வாள்பொன்னுருவி
தாமக்கருங்குழலே தாதியரேநீர்கேளும்
காஞ்சிநாடாளும் கருணரருகில்வந்து
மாங்காயளவெடுத்து மாங்கனிபோல்பொன்னெடுத்து
கருணருடைகைத்தலத்தில் கட்டழகிகொடுத்து
காஞ்சிநாடாளும் கருணருக்குதெண்டனிட்டு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
அடிவிலக்கச்சொன்னாளென்று அவருக்குரையுமென்றாள்
நானுரைத்தபாவனையாய் நீயுரைத்துவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாதியரும்

தாதிபொன்னுருவிகொடுத்த பொன்மாங்கனி கருணரிடத்திற்
கொண்டுபோய்க்கொடுத்து அடியைநிறுத்தச்சொன்னது.

போறாளவள்தாதி பொன்னாபரணமின்ன
பொற்பிரப்பங்கோல்பிடித்து போறாளவள்தாதி
காசிநாடாளும் கருணருக்குமுன்னேவந்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டாள்

ஐங்கால்வலம்வந்து அடிவணங்கிதெண்டனிட்டாள்
காஞ்சிநாடாளும் கருணாகரர்பார்த்து
அடியிருக்குமென்றுசொல்ல ஆணழகரேதுசொல்வார்
நீ ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
அப்போதுதாதி ஆரணங்கேதுசொல்வாள்
ஆபணியுமல்ல அடியேனிருப்பணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
பொன்னுருவிநாயகியாள் பூவையுடதாதியென்றாள்
போர்தேவர்ந்தடங்கண் பொன்னுருவிதாதியென்றாள்
காஞ்சிநாடாளும் கருணாகரர்கேட்டு
நீ-இங்குவந்தகாரணத்தை எனக்கறியக்கூறுமென்றார்
அப்போதுதாதி ஆரணங்கேயேதுசொல்வாள்
மாங்காயளவாகக் கொடுத்ததொருபொன்னெடுத்து
கருணருக்குமுன்னே வைத்து கட்டழகியேதுசொல்வாள்
அடியைவிலக்குமென்று ஆரணங்குதெண்டனிட்டாள்
அந்தவுரைகேட்டு ஆணழகரேதுசொல்வார்
எங்களரண்மனையி லிருந்ததொருபொன்னையெல்லாம்
திருடிவந்துபொன்னுருவி தான்கொடுத்தாளந்தனுக்கு
எங்களுடைமையது எந்தன்கையில்சேர்ந்ததுதான்

கருணர்பொன்னுருவி தாதிகொண்டுவந்தபொன்மாங்கனியைப்
பறித்துக்கொண்டு மறுபடியுங்காவலனை அடிக்கச்சொன்னது

இன்னம்-கட்டியடியுமென்றான் காவலர்வீரியனும்
கருணருரைகேட்டுக் காவலர்களப்போது
விசியடிக்கலுற்றார் வேல்பொருதுங்கண்ணனை
எட்டிமயிர்பிடித்து கட்டியடித்தார்கள்
முத்தங்கவாழ்மார்பர் மோதியடிக்கலுற்றார்
அடிபொறுக்கமாட்டாமல் அலறுகிறான்மன்னவனும்
கூவியழுகலுற்றான் கொற்றப்போர்வீரியனும்
அழுதகுரலினால் அவலோகம்கேட்டுதங்கே
கூவுகிறகூச்சலென்றால் கொற்றவற்குகாதடைக்கும்

கருணர்பொன்மாங்கனியைப் பறித்துக்கொண்டு காவலனை
அடிப்பதில்தடையின்றி தன்னைத்துறத்தியதை தாதிபொ
ன்னுருவியிடம் வந்துசொன்னது.

அப்பெரியகூச்சல்கேட்டு ஆரணங்குதாதியரும்
மனதுபொறுக்காமல் வாராளேதாதியரும்
ஆங்காரந்தன்னுடனே ஆணழகிவாராளே
போர்தேவருடந்தடங்கண் பொன்னுருவிமுன்னேவந்து
ஆங்காரந்தன்னுடனே அடிவணங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து

மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவியதுசொல்வாள்
போனதொருகாரியங்களபுதுமைமகளேசசொல்லுமென்றாள்
அப்போதுதாதியவள் ஆ ணவதுசொல்வாள்
மாங்காயளவாக நீகொடுக்கதபொனமொடுத்து
கருணருக்குமுன்னேவைத்துக் க விழ்ந்தேனே
அடியைவிலக்குமென்று அடிவணங்கிதெண்டனிட்டேன்
காஞ்சிநாடாளும் கருணரவர்பார்த்து
எவகளுடையது எனக்குவந்துசொல்லுதியென்று
இன்னங்கட்டியடியுமென்றார் காவலனுரவீரியனே
பார்த்துவயிறெரிந்து பதறிநடுங்கிவந்தேன்
கண்டுவயிறெரிந்து காணவந்தேனுந்தனிடம்
என்னவு பாயமது ஏதுசெய்வோமாசகியென்றாள்

மறுபடியும் கருணர் காவலனை அடிப்பதைநிறுத்த
பொன்னுருவி தன் ஆபரணமுதல் ஏதுவேண்டினாலுந் தருகிறேனென்று
தாதியுடன்சொல்லி அனுப்பினது

போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்கேட்டு
தாதிமுகமநோக்கித தையலாளேதுசொல்வாள்
காஞ்சிநாடாளும் கருணருங்கிட்சென்று
ஏதேதுகேட்டாலும் இளங்கொடியாளதாரோனென்றாள்
அடியைவிலக்கச்சொல்லி நாணங்கேளுமென்றாள்
அவர்-என்னுடைமைகேட்டாலுமவதேதுகேட்டாலும்
எந்தனுடைமையது அ க்கலுமகேட்டாலும்
அததனையுந்தாரோனென்று அவருக்குதெண்டனிட்டு
அடியைவிலக்கிவாரும் ஆரணங்குதாதியென்றாள்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியவள்
வாராளவள்தாதி வளம்பெரியவீதியிலே
காஞ்சிநாடாளும் கருணரெதிரேவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
நாற்கால்வலம்வந்துநமஸ்கரித்துதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
காஞ்சிநாடாளும் கருணரவர்பார்த்து
அடியைவிலக்குமென்று ஆணழகரேதுரைப்பார்
நீ-ஆருடையதாதி அறியவுரையுமென்றார்
எவருடையதாதி எனக்கறியகூறுமென்றார்
அப்போதுதாதிஅடிவணங்கிஏதுசொல்வாள்
ஆர்பணியுமல்லவடியேன் திருப்பணிதான்
பேர்பணியுமல்லபெருமாள் திருப்பணிதான்

பொன்னுருவிதாதியென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டாள்
காஞ்சிநாடாளும் கருணைவிரதத்துரைப்பான்
நீயிங்கேவந்ததை எனக்கறியக்கூறுமென்றான்
கட்டழகிதாதியவள் கருணருக்குரைத்துச்சொல்வாள்
போதேவருந்தங்கண் பொன்னுருவிநாயகியாள்
உங்களுக்குச்சொல்லுமென்று உத்திரவுசொன்னாளே
பொன்னாபரணமெல்லாம் பொற்கொடியாள்தான்கழட்டி
இட்ட உடைமையெல்லாம் இளங்கொடியாள்தான்கழட்டி
அத்தனையும் உங்களுக்கு ஆரணங்குதாரேனென்றாள்
அடிமையிலக்குமென்றாள் ஆரணங்குபொன்னுருவி
அந்தவுரைகேட்டு ஆளழகுமன்னன்

கருணாபொன்னுருவி ஆபரணமெல்லாங் கொண்டுவந்துகொடுக்தால் அடிமையிருத்துகிறேனென்று தாதிக்குச்சொன்னது.

போதேவருந்தங்கண் பொன்னுருவிநாயகியாள்
அவளுடைமைஅத்தனையும் ஆரணங்கேவாங்கிவந்தால்
அடிமையிலக்கிடுவேன் ஆரணங்கேளென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியரும்
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தாள்தாதியரும்
போதேவருந்தங்கண் பொன்னுருவிமாளிசென்றாள்
கர்ணனுடதேவியவள் கட்டழகிமாதருக்கு
தாயபோல்வளர்த்தெடுத்த தாதிவந்துதெண்டனிட்டாள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
தாதிமுகம்நோக்கி தையலருமேதுசொல்வாள்
போனதொருகாரியங்கள் புதுமையெனசொல்லுமென்றாள்
சொன்னதொருகாரியங்கள் சீக்கிரமாய்சொல்லுமென்றாள்
தையல்முகம்நோக்கி தாதியருமேதுசொல்வாள்
இட்ட உடைமை அடங்கலும்தந்தாக்கால்
அடிமைவிலக்கிடுவேனென்றுரைத்தார்ஆளழகன்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகளும்
இவள்-இட்டஉடைமையெல்லாம் ஏந்திழையாள்தான்கழட்டி
தங்கஉடைமையெல்லாம் தான்கழட்டிதையலரும்
அத்தனையும்மூட்டை கட்டி ஆரணங்குகைகொடுத்தாள்
எடுத்துநடந்தாளே ஏலங்கருங்குழலாள்
எட்டடியும்ஓரடியாய் எட்டியவள்நடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறிநடந்தாளே

பொன்னுருவிதாதியிடத்தில் அனுப்பிய ஆபரணமெல்லாம் கருணர்வாங்கிக்கொண்டு மறுபடியுங்காவலனை அடிக்கச்சொன்னது

காஞ்சிநாடாளுங் கருணருக்குமுன்னேவந்து
பணிமுகத்துமுன்னேவந்து பாவையருந்தெண்டனிட்டாள்
தங்கஉடைமைகொண்டு தையலருமுன்னேவந்து
வந்துபணிந்தவளா கண்டுமனமகிழ்ந்து

பொன்னுருவிமசக்கை.

அவள்-கொண்டுவந்தபொன்னுடைமை கொற்றவனார்தான்வாங்கி
காஞ்சிநாடாளுங் கருணைபெருந்தனுப்பா
நானகேட்டஉடைமையெல்லாம எந்தனுககுவந்ததுகாண்
நான்-போட்டஉடைமைபெலலாம தந்தாளேபொற்கொடியாள்
இனமடியுமெனறா கருணாபெருமாளும
கட்டியடியுமென்றா கருணாபெருமாளும
அப்படிககேகட்டியடி த்தாரகள காவலாகள
தாதியவளபார்த்து தையலருமேதுசொல்வாள்
கருணாமுகமநோக்கிக கட்டழகிசொலலுகிறாள்
போதேவருநதடங்கண் பொனனுருவிநாயகமும
என்னென்னதந்தாலும் என்னுதுளன்றோ
மாதரந்தபொன்னுருவி மனதுகனாயுறளே
என்னைப்பணிவிடைகள் செய்தால்விடுவீரகள்
ஏதுசெய்தால்விடுவீரகள் தெரிகிடவேசொல்லுமென்றாள்
காஞ்சிநாடாளுங் கருணாரதுகேட்டு
தாதிமுகமநோககி தார்வேந்தரோதுசொல்வார்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
இருககின்றஆஸ்தியெல்லாம் எநதனுக்குதந்தாளே
அடிமையைநிறுததிவைப்பேன் ஆரணங்குதாதியென்றான்

தாதிமறுபடியுமபோய கருணார் உன்னுடைய
ஆஸ்தியெல்லாம்கொடுததால் அடிமை
நிறுததகிறேனெனறுசொல்ல
பொன்னுருவி ஆபரணங்கொடுததனுப்பியது.

அந்தஉரைகேட்டு ஆரணங்குதாதியரும்
ஓட்டம்நடையுமாய் ஓடி வந்தாள்தாதியரும்
போதேவருந்தடங்கண பொன்னுருவிமுன்னேவநது
தாமககுழலாளும் தாதியவள்தெண்டனிட்டாள்
போதேவருநதடஙகண் பொன்னுருவிநாயகமும்
போனதொருகாரியஙகள் புதுமைகளைச்சொலலுமென்றாள்
அந்தயுரைகேட்டு தாதியருமேதுசொல்வாள்
நீ-கொடுததஉடைமையெல்லாம் கொண்டுபோய்நான்கொடுத்தேன்
அததனையுமவாங்கினர் ஆணழகன்கருணாரவா
வாஙகியவருள்ளேவைத்து மகாராசனேதுசொல்வார்
நானிட்டஉடைமையெல்லாம் எந்தனுககுவந்ததோடி
இன்னம-காரிழையாள்கைதனிலே இருக்கும்உடைமையெல்லாம்
ஆணழகிமாளிகையும் அவளுடைய ஆஸ்தியையும்
அததனையும்கொடுததால் அடிமையைவிலககுவேனென்
என்றுதான்சொன்னாரே யியலானகருணாரவர்
அந்தவுரைகேட்டு ஆணழகிபொன்னுருவி
தஙகஉடைமைகளும் தங்கததால்பெட்டிகளும்
பொன்னால்உடைமைகளும் பொறபெட்டிரததினமும்

எட்டுக்கால்கட்டுகளும் இருக்கின்றபூஷணமும்
தங்கத்தில்காணிகளும் தனகத்தேள்பூஷணமும்
ஆரணைக்குவாசம்பண்ணும் அவருடையமாளிகையும்
மயிலணையானவாசம்பண்ணும் மண்டபமும் உப்பரியும்
அம்மா மாதான்கொடுத்த அழகானமாளிகையும்
மாமன்மாதாகொடுத்த மண்டபமுங்கோபுரமும்
மஞ்சளுக்குவிட்டதொரு வளமபெரியகாணிகளும்
இருசிக்கவிட்டதொரு யெலுமிச்சந்தோப்புகளும்
வெற்றிலைக்குவிட்டதொரு விஸ்தாரத்தோப்புகளும்
தேங்காய்பறித்துண்ணும் சிறப்பானதோப்புகளும்
இந்தனையுந்தானெழுதி ஏலவகருங்குழலாள்
கன்னுடையஓலையிலே கைபெழுத்துமதானபோட்டு
ஸ்காரர்க்கருணருக்கு தெண்டனிட்டேனென்றுசொல்லி
தெண்டனிட்டேனென்றுசொல்லி தேவருக்குநீருரைத்து
ஓலையைக்கொண்டு கொடுமென்றாள்உத்தமியும்
தீவ்வோலைதானவாங்கி ஆரணக்குதாதியரும்

தாதி பொன்னுருவிகொடுத்த ஆபரணமும் ஓலைச்
சுருளையுங்கருணரிடத்திற் கொடுத்தது.

ஒட்டடியும்ஓரடியாய விட்டுகடந்து
பத்தடியுமோரடியாய் பதறிப்பலகடந்து
காஞ்சிநாடாளும கருணர்க்கெதிரேவந்து
பட்டோலைமுன்னேவைத்து பாங்கியவள்தெண்டனிட்டாள்
கையோலைமுன்னேவைத்து கட்டழகிதெண்டனிட்டாள்
காஞ்சிநாடாளும் கருணரவாபார்த்து
ஓலையைத்தானெடுத்து வாசித்தார்உத்தமனும்
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கநகைநகைத்து
உடம்புகுலுங்கி மேவ உத்தமருந்தானகைத்து
தாதிமுகமநோக்கி தாரலந்தானதுசொல்வார்

பொன்னுருவிதாதிவசங்கொடுத்தனுப்பிய ஆபரண
மெல்லாங்கருணா பெற்றுக்கொண்டு மறுபடியும
காவலரைகட்டி அடிக்கச்சொன்னது.

நாங்கள்-இட்ட உடமைகளும எழுபரிமண்டபமும்
மஞ்சளுக்குவிட்ட வளமபெரியசோலைகளும்
அத்தனையும்எங்கள்து ஆரணக்குதாதியரே
எங்களுடைமையெல்லாம எங்களுக்குத்தவந்ததடி
மன்னவனார்சேவகரை வாரியடியுமென்றா
காவலராவீரியரைக் கட்டியடியுமென்றா
அந்தவுரைகேட்டு அங்கிருந்தசேவகர்கள்
கட்டியடித்தாரோ கனகமுடிசேவகரும்
வீசியடித்தாரோ வேல்பொருதுங்கண்ணரை

மயிலைப்பிடித்தடித்தார் மாஞ்சோலைக்காவலனை
அடித்த அடியாலே அலறுகிறான் மன்னவனும

பொன்னுருவியால் அனுப்பப்பட்டதாதி கருணர்
செயலதைப்பொறுககாமல் மனவருததத
த்டன் அவனைக்கேட்டுக்கொள்வது.

அப்போது தாதியவ ளாரணங்குமேலுசொல்வாள
காஞ்சிநாடாளு ற கருணருககுமுன்னேவநது
வண்ண முடிவணங்கி மாதவள தாங்கேட்டு
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும இன்ன மொருவாாத்தை
போதேவருநதடங்கண பொன்னுருவிநாயகிபாள்
அந்த-மங்கைஇருக்கும்விடம் மனுவேவநதுவும்
கமலப்பூாாயகிபைக கட்டியணைநததுவும்
மாதரிளங்கொடிக்கு மைந்தனுண்டானதுவும்
மசகைப்பெரிதாகி மாங்கனிகள்கேட்டதுவும்
மன்னுயுன தோட்டததிலே மாதுநான்வநததுவும்
ஒருமாஙகாய்நான்பறிதது உத்தமிக்குசசென்றதுவும்
மாதர்க்குக்கொடுத்ததொரு மாஙகனிகாவலரும்
மன்னன்பெருமாளும் வைதண்டஞ்சேருவதும்
அடிபொறுக்கமாட்டாதே அவலோகஞ்சேருவதும்
போதுமையாளந்தனுக் கொருமாங்காபறிததகொள்ளை
இன்னமென்னகொடுத்தால் விடுவீர்காண்மன்னவரோ
அநதஉரைகேட்டு அழகர்கருணரவர்

கருணர்தாதியைப்பார்தது பொன்னுருவி எனக்குப்
போசனஞ்செய்துபோடடால் அடியைநிறுத்
துகிறேனென்றது.

நீ-கொடுப்பதும்வாங்குவதும் ஏற்காதுஎநதனுக்கு
தருவதுவும்வாஙகுவதும தையலரேமாளாது
நீ-கொடுததஉடைமையெல்லாம கொம்பனைக்குநான்கொடுப்பேன்
அவள்-தந்தஉடமையெல்லாம் தருவேன்காண்தையலர்க்கு
அவளுடையகையாலே அடிசில்சமைக்கவேணும்
தேசத்தையாளும் திரியோதிரராசருக்கும்
பேண்டமயில்கண்ணுள் பெருந்திருவாள்நாயகிக்கும்
தோகைமயில்கண்ணுள் துற்சடையாள்நாயகிக்கும
எந்தனையுங்கூட உடனுாபந்திவைத்து
அவளுடையகையாலே அடிசமை-வேணும்

நாங்களும்-போசனமஉண்டபின்பு பொறகொடியாள்மாதுகன்னி
காசசாககளிப்பாக்குங கமமாறுவெறறிலையும
எங்களுக்குதான்கொடுகக வேணுங்காணமாதுகனனி
அன்றுஇரவில அவளிடதகில்வ்ந்திருநது
கட்டியணைந்து கலநதுவிளையாடவேணும
இதுகளுகெல்லாம இசைநதாளேயாமாகுல்
மாதுகருங்குழலா ளவள சொனனாலாகாது
கையாலெழுதி தரவேணுங்கட்டழகி
அப்படிகககிததநதாலே அடியையிலககிடுவேன்
என்றுமவருரைக்கத தாதியதுகேட்டு
வீசிக நதாளே விசையுடனே தாதியநும
அவ்விதவிட்டு அனுப்பினேனதாதியவள
போமதேவருநதங்கண பொனனுருவிமுன்னேவநது
தாமகசுழலாளுந தாதியவள்தெண்டனிட்டாள
போதேவருநதங்கண பொனனுருவியே நுசெயகாள்
போனதொருகாரியஙகள் புதுமைமெனனசொலலுமென்றாள்
சென்றதொருகாரியஙகள் சேதியெனனசொல்லுமெனறாள

உன்கையால் கருணாருககுப் போசனஞ்சமைதது
போட்டால் அடியை நிறுததுவேனெனறு
கருணாசொனனதை தாதிபொன்னுருவி
யிடமவந்து சொல்வது.

அந்தவுரைகேட்டு தாதியவளேதுசொலவாள
காஞ்சிநாடாளுங் கருணாருககுதெணடனிட்டு
கொடுதத்உடமை அடஙகலுநானகொடுததேன்
விட்டுவிடவேணடுமென்று வேநதநுககுதெணடனிட்டேன்
அந்தனையுந்தான்வாங்கி அவருதெனறுகானுரைததார்
மறறுமுறையது கேட்டேனம்மாமனனவனை
அடியில்சமைக்கணுமாம் அவாகளுககுபபோடணுமாம்
கருணமகாராசருன்னைக் கட்டியணையவேணுமாம
கட்டியணைந்து கலநதுவிடவேணுமாம்
அப்படிக்கேகல்லதென்று ஆரணங்கேயுரைத்து
வாயாலேசொன்னால் மாளாதாமானவறகு-
கையாலெழுதி தநதாளேசமமதிப்பார
அப்படிககிசெய்தாலே அடியைவிடுத்திடுவார்

கருணர்பொன்னுருவிகது ஓலையெழுதுவதைககுறித்து
தாதியின்பேரில் மனவருததப்பட்டு விசனப்படுகிறது.

என்றவுரைகேட்டு ஏதுசொல்வாள்பொன்னுருவி
நீ-தாதியொருத்தி தரமறிப்பாயென்றறியேன்

மோப்பியொருத்தி மூளைகுலைப்பாளென்றறியேன்
கட்டழகிநொந்துமவள் கரிநீர்பாரேளேதுசொல்வாள்
ஓலையெடுத்தந்த உத்தமியாள்தானெழுந்து
ஒழிகுலத்தானென்று நிண்டாமல்தானிருந்தேன்
சாதிகெட்டானென்று சொல்லி சலிப்பாகநானிருந்தேன்
தோஷமாகுமென்றல்லவோ தீண்டாமல்நானிருந்தேன்
அடி மங்கையே நாந்துறந்தது மசக்கைகுணமாகி
மசக்கைபெரிதாகி மாங்காயுமுண்டாகி
மாங்காயல்லவோ வந்துமுகமாகிறது
வான்முகமாகிறது வாயெல்லாமழுகிறது
இப்படிக்கிருந்துதோ ஈஸ்வரனாதனசெயலும்
கடவுள்செயலோவென்று கலங்கியழுகலுற்றாள்
தேம்பியழுகலுற்றாள் தெய்வந்தனைத்தானினைந்து
அப்படிக்குத்தானழுக அங்கிருந்ததாதியர்கள்

பொன்னுருவி விசனப்படுவதைப் பார்த்து தாதிகள்
தைரியஞ்சொல்லுவது.

அங்கிருந்ததாதியர்கள் அரிவைபாலேதுசொல்வார்
ஆனைகட்டிவாழ்ந்தாலும் ஆரணங்கேயென்னசெய்வாய்
குதிரைகட்டிவாழ்ந்தாலும் கொற்றகுழலியரே
பல்லக்கிலேறி வாழ்ந்தாலும் பைங்கிளியே
கொண்டான்பெருமையது வேணுமம்மா கொம்பனையே
தாலிப்பெருமையது வேணுமம்மா தார்குழலே
மைந்தன்பெருமையது வேணுமம்மா தார்குழலே
ஆர்வீடு ஆர்வீடு ஆசையரே ஆர்வீடு
ஆளனுக்குநீ பணிந்தால் அதனாலே குற்றமில்லை
பத்தாவைநீ பணிந்தால் பழிதொன்றும்வாராது
கொண்டவனை நீ பணிந்தால் குற்றங்களொன்றும் வாராது
அடி சில்சமைப்பேனென்று ஆரணங்கே நீயெழுந்து
போசனஞ்செய்யவல்லோ வாருமென்று நீயெழுந்து
இப்படி எழுதியனுப்பினால் இதங்கும் அவர்மனது
மனமிரங்கி மன்னவனும் மறுமொழிபொறுப்பீர்
மாங்காய்கொடுத்ததொரு மன்னவனைவிட்டிடுவார்

பொன்னுருவிதாதிகள் தைரியஞ்சொன்னதின்பேரில்
மனந்தெளிந்துதாளிப்பனையோலையெடுத்து கருணைகொழுந்துக்
காதிவசங் கொடுத்தனுப்பியது.

அந்தவுரைகேட்டு ஆரணங்குபொன்னுருவி
தாளிப்பனையோலை வாரித்தலைவரிந்து

வெள்ளிப்பனோலை விருபுரமுந்தான்சீவி
செம்பொனெழுத்தாணிகொண்டு சீராககைபிடித்து
விக்கினரைவேண்டி வினாயகரைததான்தொழுது
கணபதியைவேண்டி கைதொழுதுதெண்டனிட்டு
காஞ்சிநாடாளும் கருணர்பெருமாளே
உங்கள்-அடிகீழ் முடிசாய்ந்தேன அருங்கிளியாளபொன்னுருவி
நான்-செய்தபெருங்குறறமெல்லாம் தேவரீர்சகிபொறுதது
குறங்கள்செய்தாலும் குணமாகக்கொண்டிணைத்து
மனதுபெரிதுகந்து மன்னவனேநீவிலக்கி
எனக்காகநீபொறுதது இவ்வடியைநீவிலக்கும்
அப்படியென்றுசொல்லி எழுதினாளோலையிலே
ஓலையெழுதியவளோ முத்தரிக்கந்தானகேட்டு
தங்கச்சுருளோலை தாதிகையில்தானகொடுத்தாள்
தாதியவளபொழுது தன்கையில்தான்தாங்கி
பொன்னோலைபிடித்து போறாளவளதாதி
காஞ்சிநாடாளுங் கருணரெதிரேவந்து
ஓலைச்சுருளைவைத்து உத்தமியாள்தெண்டனிட்டாள்

தாதிகொண்டுவந்தவோலையை கருணராவாசித்து
காவலனை கட்டவிழ்க்கச் சொன்னது.

காஞ்சிநாடாளும் கருணரவாபார்த்து
ஓலைச்சுருளெடுத்து உத்தமனாவாசித்து
கட்டழிவார்த்தைகொண்டு கருணர்மனங்குளிர்ந்து
ஆள்பெருஞ்சேவகரை ஆணழகர்தானழைத்து
கட்டையவிழுமென்றார் காவலர்களவீரியரை
கட்டையவிழ்த்தார்கள் காவலனார்வீரியரும்
நுட்பமுடையவனை நோகாதடித்தவர்கள
ஓயாதழுதவனும் உடனேவெளியானான்
காஞ்சிநாடாளுங் கருணரெழுந்திருந்து
அவர்-எட்டிநடந்தாரோ எதிரொளிக்குஞ்சூரியன்போல்
சாஞ்சிநடந்தாரோ சந்திரனொளிபோலே
மாநகரமாளும் மகாராசன்மாளிசென்றார்
தேசத்தையாளுந் திரியோதிரனும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகமும்
தோகைமயிலனையாள் துற்சடைப்பூநாயகமும்
எல்லவருமொன்றாக வீற்றிருக்கும்வேளையிலே

கருணர்காவலனை கட்டவிழ்த்துப்போட்டு தன்வீடுவந்து
திரியோதிரன் பெருந்திருவாளனுஞ்சடையாள்
மூவரையுந்தன்னோடுகூடவந்து பொன்னுருவி
யிடத்திற்குப்போசனஞ்செய்ய அழைத்தது.

காஞ்சிநாடாளுமக் கருணரவரங்கேவந்து
இருக்கின்றபேர்களுக்கு யேதுசொல்வார்கருணரவர்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிகையில்
விருந்துக்குத்தானழைத்தாள் வேல்பொருதுங்கண்ணனாரும்
அவள்-அழைத்ததினாலே நாமனைவோரும்போகவேணும்
இன்றைக்குமத்தியான மெல்லவருந்தாளிருந்து
விருந்துபொசிப்பதற்கு வாருங்களென்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அவர்களெசித்துரைப்பார்
ஏதுகாண்மன்னவரே இரங்கினளோபொன்னுருவி
நாடுஞ்செழிக்கவோ நாமுஞ்சுகப்படவோ
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்தார்
வருகிறோமென்றுசொல்லி மணவாளர்கள்தானிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பொன்னுருவி-கருணருக்குச் சமையல்செய்தது

போதேவருந்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
ஆக்குமடப்பள்ளியை அலகிட்டுத்தான்திறந்து
கோட்டைமடப்பள்ளியை குச்சிட்டுத்தான்திறந்து
சாணத்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரசுவர்பூசி
ஆச்சாவுந்தேக்குமா அரசம்பிளந்தடுக்கி
கெட்டென்றகல்லை கெரித்துநெருப்பாக்கி
தென்கடலுமாணிக்கம் திரட்டிஉமிசேர்த்து
வடகடலுமாணிக்கம் வாரிஉமிசேர்த்து
பெருநெருப்பைமூட்டி பெண்கொடியாளேதுசெய்வாள்
பானைகழுவி பன்னீருலைவார்த்து
அரிதானச்செந்நெல்லை ஆத்திமணல்பொறுக்கி
அரிதானச்செந்நெல்லை தூத்திமணல்பொறுக்கி
பன்னீருலைவார்த்து பதமாகவைத்தாளே
அரிசியைத்தீட்டியே அன்பாகத்தான்போட்டு
பதம்பார்த்துதான்வடித்தாள் பைங்கிளியாள்கையாலே
வாழைக்காய்கொய்து வழுதலங்காய்காம்பரிந்தாள்

பாவக்காய்கொய்து பந்தங்காய்காம்பரிந்து
சோலைப்பலாக்காய் சுளைசுளையாயகொய்திடுவாள்
ஈரப்பலாக்காய இளம்பூள்ளுகொய்திடுவாள்
நல்லவெல்லம்பூ சீனிக்காய் கொய்வாள புளியிடுவாள்
உப்பூரபுளியூர உகந்துமிகப்பொருந்த
தாளித்திறக்கினாள் சமைததப தார்க்கமெல்லாம்
நெய்காச்சியாற்றினாள் பொன்னுருவிபூமுடியாள்
பால்காச்சியாற்றினாள் பங்கயஞ்சீர்கண்ணாளும்
தாதியனைதானழைத்து தையலருமேதுசொல்வாள்
அடிசில்சமைத்ததடி அண்ணழையுமவனையென்றாள்

பொன்னுருவி தாதியை அழைத்து கருணாரிடத்திற்போய்சமையல் செய்து முடிந்ததென்று அவரையழைத்துவாக்கொண்ணாக.

அந்தஉரைகேட்டு ஆரணங்குதாதியவள்
சந்தோஷப்பட்டு தானடந்தாள்வீதியிலே
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவுகளுந்தான்தாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
மாநகரமாளும் மகாராசன்மாளிசென்றாள
தேசத்தையாளும் திரியோதிரன்முன்னேவந்து
அடிவணங்கிதெண்டனிட்டு தாதியவளேதுசொல்வாள்
பேரோதேவரீர்தடங்கண் பொன்னுருவிநாயகியாள்
ஆனந்தவாழ்மாரி அடிசல்சமைத்தாளகாண்
அமுதுண்ணவாருமென்று அடிவணங்கிதெண்டனிட்டாள்

தாதிபோசனத்துக்கழைக்க கருணாதிரியோதிரன் துற்சனையாள் பெருந்திருவாள் பந்துஜனங்கள் இவர்கள் எல்லாரும் பொன்னுருவி வீட்டுக்குவிருநதுண்ண வருகிறது.

அந்தஉரைகேட்டு ஆனந்தமாயெழுந்தார
கைகாலலம்பி கனிவாயைசுத்திபண்ணி
வாயோடும்பல்லு மதிமுகமுஞ்சுத்திபண்ணி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
திக்கெங்குநோக்கி திசையெங்குமாதரித்து
அம்பைமலர்போட்டு சூரியனைபூசைபண்ணி
ஐயனேமெய்யனே ஆயிரங்கண் இந்திரனே
பொய்சொல்வார்க்கெல்லாம் புரங்காக்கும்புண்ணியனே

மெய்சொல்வார்க்கெல்லாம விளக்கெளியாய்நின்றவரோ
மூப்பத்துமுக்கோடி முனிவரையும்பூசைபண்ணி
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையுமகைதொழுது
சுத்திவளையவந்து செவியிலொருபூச்சொருகி
இனிவாருந்தம்பியென்று இசைந்துநடக்கலுற்றார்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியும்
தோகைமயில்கண்ணாள் துற்சனையாள்மங்கையரும்
கால்கைகள்சுத்திபண்ணி கனிவாய்க்கொப்பளித்து
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
சுத்திவளையவந்து செவிதனிலேபூச்சொருகி
ஆரணங்குமாதரெல்லாம் அரண்மனையினுட்புகுந்து
பட்டாடைதான்களைந்து பாவாடைதானுடுத்தி
சரிகைப்பாவாடையின்மேல் சாலுவைகள்மேல்போர்த்து
தாதியர்கள்தானழைத்து தண்டிகைகொண்டுவாடியென்ன
தண்டிகையைதானெடுத்து தாதியர்கள்கொண்டுவந்தார்
ஆவ்வீதிதாண்டி வாரார்கள்வீதியிலே
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சிதம்பரவீதி தெருவும்பலதாண்டி
செம்பவழவீதியெல்லாம் தாண்டியந்தையலர்கள்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
போதேவருந்தடங்கண் பொன்னுருவிமாளிசென்றார்

பொன்னுருவிமாளிகைக்கு கருணர்முதலாக

அனைவோரும்விருந்துண்ணவந்தது.

மாளிகைக்குள்ளாக மன்னவர்கள்வந்தார்கள்
போதேவருந்தடங்கண் பொன்னுருவிதான்பார்த்து
வந்தவொருமன்னருக்கு வண்ணத்தடுக்குமிட்டாள்
சிம்மாதனங்களிட்டு வெண்போல்துயில்மடித்தாள்
இட்டவொருஆசனத்திலேறிபவர்வீற்றிருந்தார்
இருவரந்தமாதருக்கு இட்டாளேபொன்தடுக்கு
இட்டவொருஆசனத்தில் இருந்தார்கள்மாதர்களும்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
வணங்காமுடியோனை வணங்கியேநின்றாளே

பொன்னுருவிதிரியோதிரன் பெருந்திரு

வாள்அவர்களைவணங்கி அவர்களால்

ஆசீர்வதித்தலைப்பெற்றது.

மாதுஇளங்கொடியாள் மாமாவைத்தெண்டனிட்டாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து

வந்துபணிந்தவளை கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீரவளர்ந்திருப்பீர வையகதருப்பிருபந்திருப்பீர
சிறப்பீர்நிலைதருப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர
பெற்றிருவீரபெற்றிருவீர பிள்ளை திறையும்
அத்திபூத்துக்கு அரச ளஆணபெறுவீர்
அங்காடைநாடாள ஆண்பிள்ளைபெற்றிருவீர
காசிவளநாடாள காளைகளைபெற்றிடுவீர
மலர்களவாசலிலே மைந்தர்களைபெற்றிடுவீர
அம்பலத்துவாசலிலே ஆண்பிள்ளைபெற்றிடுவீர
ஆல்போல்தழைத்து அருகுபோலவேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர
கருணையாயன்பும் கலந்து நீவாழ்ந்திருவீர
வாழ்வீரகாணென்று மனமகிழ்ந்துவாழ்த்தினார்
போதேவருந்தட்டங்கண் பொன்னுருவிநாயகியும்
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளமுனேவந்து
காண்கிறேனைச்சிவென்று காலமேல்முடிசாய்த்தாள
பேடைமயில்கண்ணாள் பெருந்திருவாளதாளபாதத்து
வந்துபணிந்தவளை கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீரவளர்ந்திருப்பீர வையகத்திலுயர்ந்திருப்பீர
சிறப்பீர்நிலைதரிப்பீர நீடூழிவாழ்ந்திடுவீர்
கற்புதைத்ததூண்போல கலங்காமல்வாழ்ந்திடுவீர
வில்புதைத்ததூண்போல் விளங்கவேவாழ்ந்திடுவீர்
வாழ்வீரகாணென்று மனமகிழ்ந்துவாழ்த்தினாள
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
பிள்ளைபெறுநாளிலே போதவுறவானீரோ
மைந்தன்பெறுநாளயிலே வணங்கிவுறவானீரோ
என்று-பரிபாசமாகவே பேசியவளிருந்தாள்
தோகைமயிலனையாள் அரசனையுமேநதுசொல்வாள
போதேவருந்தட்டங்கண் பொன்னுருவிநாயகமே
காஞ்சிநாடாளும் காருணரவரோடிவந்து
நீ-கலந்துஉறவாடி கலக்கமற்றுவாழ்ந்திரோ
கூடிவிளையாடி குணமுடனேவாழ்ந்தீரோ
எப்படிக்கியானாலும் இருவர்மனமொத்து
கலந்திருந்தால்போதுமடி கட்டழகிநாயகமே
இப்படியேசொல்லி இருந்தார்களெல்லவரும்

பொன்னுருவிகருணாமுதலானபேர்களுக்கும்
அன்னம்பகிர்ந்துபரிமாறுகிறது.

போதேவருந்தட்டங்கண் பொன்னுருவிநாயகியாள
ஆக்குடைப்பணியை அலம்பிட்டுநீர்தெளித்து

செம்பொன்மிஞ்சிகள்திருத்தி செம்பொனதண்டைகளுமிட்டாள்
புலிமுகக்கால்திருத்தி பொன்மறல்தண்டைகளுமிட்டாள்
இட்டதொரு ஆசனத்தில் ஏறியவள்வீற்றிருந்தார்
வாழையிலைபோட்டு மணிச்சோறுபுகி தெளித்தாள்
முல்லைமலர்போலே போசனமுந்தான் சொரிந்தாள்
சுத்திகறிகளைவைத்து புத்துருக்கு நெய்வார்த்தாள்
குத்துப்பருப்புவிட்டு கூசாமல் நெய்வார்த்தாள்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
கூட்டுக்கறியும குழம்பில்வகைகறியும்
ஆயிரத்தெட்டு அருங்கறியும்போசனமும்
முன்னூற்றியெட்டு முதமகறியும்போசனமும்
அத்தனையுங்கொண்டு படைத்தாளே ஆணழகி
அந்த அடிசல் அமுதுண்டபிற்பாடு
அத்தளிகைமாற்றியொரு பொற்றளிகை முன்னேவைத்தாள்
காச்சியபாலும திருத்தியமுப்பழமும்
வாழைப்பழமும் மதுரையின்மாம்பழமும்
வேரின்புரத்தில் வெடித்தபலாச்சுளையும
கொம்பில்சிறுதேனுங் கோதுபடாசர்க்கரையும
மலையில்சிறுதேனும் பகொளசர்க்கரையும்
அந்த அடிசல் அமுதுண்டபிற்பாடு
பாலடிசல்உண்டு பன்னீரால்கையலம்பி
உருவுகொண்டவாய்துடைத்து உத்தமர்கள்வீற்றிருந்தார்
போதேவருந்தங்கம் பொன்னுருவிநாயகியாள்
வயிரக்கல்பெட்டிதனை வகையுடனேதான் திறந்து
வாடாயிலைச்சுருளும் வண்ணந்துவர்பாக்கும
கோர்வையிலைச்சுருளும் கொட்டை துவர்பாக்கும்
காச்சாகளிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஏலம்லவுங்கமும் இசைந்தகளிப்பாக்கும்
சாதிப்பெருங்கட்டில் சங்குசுட்ட சுண்ணாம்பும்
சுருளைசுருள்மடித்து சுண்ணாம்பைக்கூட்டவிட்டு
சுத்தமிட்ட பொன்தட்டில் உள்ளேசுருள்மடித்து
தங்கத்தாம்பாளந்தன்னில் தாம்பூலந்தானெடுத்து
அனைவருக்குமுன்பாக அவரவர்கைத்தான்கொடுத்தாள
தாம்பூலந்தான்தரித்து தயவாகத்தானிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

கருணர் பொன்னுருவியுடன் கூடுகிறது.

கருணரும்பொன்னுருவி களித்துவிளையாடி
தன்னுடையமாளிகையில் தனித்துவிளையாடி
மன்மதனுமரதியும்போல் மகிழ்ச்சியுடன்கூடி
கந்தரும்வள்ளியும் கைகலந்தபாவனைபோல்
இருவருந்தான்சேர்ந்து இசைவாகவாழ்கையில்

பொன்னுருவி புத்திரனைப்பெற்று விஸ்வகேதென்று பெயரிக்கிறது.

பொன்னுருவிநாயகியாள் பொற்கொடியாளப்பொழுது
மாதுநல்லாள்பொன்னுருவி மைந்தருமுண்டாகி
ஓராந்தான்மாதமதில் ஒருதிங்கட்கிழமையாச்சு
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்களாதமாச்சு
மூன்றாந்தான்மாதத்திலே முலைமுகந்தான்கறுத்தது
நாலாந்தான்மாதத்திலே நாயகியுமசக்கையானாள்
ஐந்தாந்தான்மாதத்திலே அடிவயிறுபெருத்திடுமாம
ஆறாந்தான்மாதத்திலே அங்கமெல்லாந்தங்கநிறம
ஏழாந்தான்மாதத்திலே இளங்கொடியாளநாயகியும
பொற்கொடியாளநாயகிக்கு போசீமந்தஞ்செய்தார
எட்டாந்தான்மாதத்தி லிளைப்புந்தவிப்பாமலை
இளைப்புந்தவிப்புமாளுள் இளங்கொடியாள்நாயகியும்
ஒன்பதாம்மாதத்திலே உடம்பெல்லாம்நொந்தெய்யாள்
பத்தாந்தான்மாதத்திலே பெற்றாளேவிஸ்வகேதை
பெற்றாளேபொன்னுருவி பேருமிட்டாளப்பொழுதே
வளர்த்தாளேபொன்னுருவி வைத்திருந்தாளவிஸ்வகேதை
இப்படியாக இருக்கின்றவேளையிலே

பூலோகராஜாக்களவந்து சகலமானபேருக்கும வாழ்த்துதல் செய்கிறது.

அப்போ பூலோகராசாக்கள் புத்திரனைத்தானபார்த்து
பூமாரிதானபொழிந்தார பூலோகராசாக்கள
மண்டலத்துராசாக்கள் மழைமாரிதான்பொழிந்தார்
மழைமாரிதான்பொழிந்தார் மண்டலத்துராசாக்கள்
பொன்னுருவிமசக்கைபுகழ்ச்சியாய்க்கேட்டோர்கள
கருணைநடந்தன்கதையைக் காதாரக்கேட்டவர்கள
கலியாணமில்லாதார் கடுகாணமபெறுவார
புத்திரனில்லாதார் புத்திரனுண்டாகவார
அச்சிலடித்தவர்கள் அன்புடன்மிகவாழி
இதை-வாங்கிப்படித்தவர்கள் வாழ்வுண்டாய்த்தானிருப்பார்
பொன்னுருவிகதைகேட்டோர் புகழ்ச்சியாய்வாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம முசியாமல்வாழ்ந்திடுவார
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

பொன்னுருவிமசக்கை.

முற்றிற்று.